Saturday
# மெயில்
01 - 45
07-08-2010
பக்கங்கள்: 24
விலை: 15/=
සැටඩේ මේල්
A Fascinating Weekly Bulletin

# அழகிரியின் முதற் பதில்

பொதுசன நூலகம்
படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதியின் புதல்வர் மு.க.அழகிரி இந்திய மத்திய அரசாங்கத்தில் அமைச்சராகப் பதவியேற்று ஒருவருடத்துக்கும் கூடுதலான காலம் கடந்த நிலையில் கடந்த வியாழக்கிழமையே முதற்தடவையாக பாராளுமன்றத்தில் தனது அமைச்சு சம்பந்தப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்திருக்கிறார்.

இரசாயன, பசளை அமைச்சரான அழகிரி லோக்சபாவில் கேள்வி நேரத்தின் போது முதற்தடவையாக பதில் அளித்த பிறகு கிளப்பப்பட்ட துணைக்கேள்விகளுக்கு அவரின் இணையமைச்சரான ஸ்ரீகாந்த் ஜெனா ஆங்கிலத்தில் அல்லது இந்தியில் பதில்களை அளித்தார்.

இந்திய பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் அமைச்சர்கள் தங்களது உரைகளை ஆங்கிலத்தில் அல்லது இந்தி மொழியில்தான் நிகழ்த்த முடியும். தங்கள் அமைச்சுகள் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கும் அவர்கள் அந்த இரு மொழிகளிலுமே பதில்களை அளிப்பதற்கே இந்திய பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் இடமளிக்கின்றன. அமைச்சர்கள் அல்லாத பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தாய் மொழியில் உரையாற்றுவதற்கு எந்தத் தடையும் இல்லை.

தமிழைத் தவிர, ஆங்கிலத்திலோ இந்தியிலோ சரளமாகப் பேசத் தெரியாத அழகிரிக்கு பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்தியிருந்தன. அதனால், அவர் பாராளுமன்றக் கூட்டங்களில் கலந்துகொள்வதையும் கேள்விகளுக்குப் பதிலளிப்பதையும் ஒருவருடத்துக்கும் கூடுதலான காலமாகத் தவிர்த்துவந்தார். அதற்காக பாராளுமன்றம் கூடுகின்ற தினங்களில் அழகிரி தலைநகர் புதுடில்லியில் இருப்பதைத் தவிர்த்து சொந்த மாநிலமான தமிழகத்தில் அல்லது வெளிநாடுகளில் இருந்துவந்தார்.

அழகிரியின் இந்தப் பிரச்சினை தந்தையாருக்கும் பெரிய தலையிடியைக் கொடுத்தது. இதற்கு எவ்வாறு தீர்வுகாண்பதென்று தலையைக் குழப்பிக் கொண்டிருந்தார்கள். தமிழில் பதில்களை அளிப்பதற்கு அனுமதி தருமாறு அழகிரி எழுத்து மூலமாக விடுத்த வேண்டுகோளை லோக் சபை சபாநாயகர் திருமதி மீராகுமார் ஏற்றுக் கொள்ளவில்லை.

(2ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 30 குட்டிகளை ஈன்றெடுத்த மலைப்பாம்பு



மலைப்பாம்புகள் முட்டைகளை இட்டு அடைகாத்தே குட்டிகளைப் பொரிக்கின்றன. ஆனால் தமிழகத்தின் நாகபட்டினம் மாவட்டத்தில் செம்பனார் கோயிலுக்கு அண்மையாக வழமைக்கு மாறாக 30 பாம்புக்குட்டிகளை ஒரே ஈற்றில் ஈன்றெடுத்த நாலரை அடி நீளமான மலைப்பாம்பொன்றை வனத்துறை அதிகாரிகள் கண்டெடுத்திருக்கிறார்கள். இந்த குட்டிகள் உரிய காலத்துக்கு முன்னதாகவே பிறந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த செவ்வாய்க்கிழமை செம்பனார் கோயிலுக்கு அண்மையாக பரசலூரில் நீர்த்தாங்கியொன்றுக்கு அருகே பற்றைக்குள் இந்த மலைப்பாம்பு காணப்பட்டது. கட்டட நிர்மாணத் தொழிலாளர்களே இதை முதலில் கண்டனர். அவர்கள் தெரிவித்த தகவலையடுத்து சீர்காழியில் இருந்து சம்பவ இடத்திற்கு விரைந்த வனத்துறை அதிகாரிகள் மலைப்பாம்பை பிடித்து பையொன்றுக்குள் அடைத்தனர்.

காட்டுக்குள் மலைப்பாம்பை சுதந்திரமாக விடுவிப்பதற்கு அதிகாரிகள் கொண்டு சென்ற போது பையுக்குள் 30 குட்டி மலைப்பாம்புகள் இருப்பதைக் கண்டனர். அதிகாரிகளுக்கு பெரும் ஆச்சரியமாகப் போய்விட்டது. தாயும் குட்டிகளும் காட்டுக்குள் விடப்பட்டிருக்கின்றன.

## காவல் தெய்வமா?



ஒருவர் வீதியில் விரைவாக நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது திடீரென்று 'நில், அந்த இடத்திலேயே நில்... அசையாதே அசைந்தால் பெரிய செங்கல் ஒன்று உன் தலையில் வீழ்ந்து நீ சாவாய்' என்று அசரீரி ஒன்று கேட்டது.

அவரும் அந்த இடத்திலேயே நின்றார். அசரீரி கூறியதன் பிரகாரம் பெரிய செங்கல் ஒன்று வந்து அவரின் முன்னால் பெரும் சத்தத்துடன் வீழ்ந்தது. அவர் அதிர்ந்து போனார். அசரீரியை அலட்சியம் செய்திருந்தால் கொல்லப்பட்டிருப்பேன் என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டார்.

பிறகு தனது நடைப் பயணத்தை அந்த நபர் தொடர்ந்தார். சில மீற்றர்கள் தூரம் சென்றதும் மீண்டும் அசரீரி- 'நில், அசையாதே. அசைந்தால் ஒரு கார் வந்து உன்னை மோதி நீ பலியாவாய்'

அசரீரியின் பிரகாரம் அவர் மீண்டும் அசையாமல் அந்த இடத்திலேயே நின்றார். அவருக்கு முன்னால் ஒரு கார் விரைவாகவந்து நின்றது. ஒரு அடி எடுத்துவைத்திருந்தால் கூட அவரைக் கார் மோதிச் சாகடித்திருக்கும்.

அசரீரியினால் அதிர்ச்சியடைந்த நபர் கேட்டார்- 'யார் நீ... எங்கே இருக்கிறாய்?'

'நான்தான் காவல் தெய்வம்' என்று பதில் வந்தது.

'அப்படியா... நான் திருமணம் செய்த வேளை நீ எங்கேயிருந்தாய்...' என்று ஆத்திரத்துடன் அந்த நபர் கேள்வியெழுப்பினார்.

## ஈ விரட்டும் கணவர்



உத்தியோகத்தில் இருந்து ஓய்வுபெற்ற கணவர் வீட்டில் இருக்க மனைவி பொருட்கள் வாங்குவதற்காக சந்தைக்குச் சென்று விட்டு வீடு திரும்புகையில் கணவர் ஒரு பத்திரிகையை மடித்து தலைக்கு மேலாக வேகமாக ஆட்டிக் கொண்டிருந்ததைக் கண்டார்.

மனைவி: என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?

கணவர்: ஈக்களை விரட்டிக் கொண்டிருக்கின்றேன். மூன்று ஆண் ஈக்களையும் 2 பெண் ஈக்களையும் பிடித்து விட்டேன்.

மனைவி: எவ்வாறு ஈக்களில் ஆண், பெண் வேறுபாட்டைக் கண்டுபிடிக்கிறீர்கள்?

கணவர்: அதுவா வெகு சுலபம், அந்த மூவரும் பியர் ஊற்றி வைக்கப்பட்ட கிளாஸின் மேல் அமர்ந்திருந்தார்கள். ஏனைய இருவரும் தொலைபேசி மேல் அமர்ந்திருந்தார்கள்.

**அழகி...**

(முன்பக்கத் தொடர்ச்சி)

தனது அமைச்சு சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு ஒருவருடத்துக்கும் மேலாக அழகிரி சபையில் பிரசன்னமாகாமல் இருந்து வந்தது குறித்து எதிர்க்கட்சிகள் பிரச்சினை கிளப்பின.

மத்திய அமைச்சர் பதவியைத் துறந்துவிடலாமா என்பது குறித்தும் அழகிரி சிந்திக்கத் தொடங்கியதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. இறுதியில் பாராளுமன்றத்தில் நீண்டகாலமாக உறுப்பினராக் இருந்துவருபவரும் பல தடவைகள் மத்திய அமைச்சராகப் பதவி வகித்தவருமான திராவிட முன்னேற்றக்கழகத்தின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான டி.ஆர்.பாலுவுடன் கூடச் சென்று சபாநாயகர் மீரா குமாரை சிலவாரங்களுக்கு முன்னர் அழகிரி சந்தித்து தனது மொழிப்பிரச்சினைக்கு ஒருவாறாகத் தீர்வைக்கண்டார்.

உறுப்பினர்களினால் சமர்ப்பிக்கப்படும் எழுத்துமூலகேள்விகளுக்குப் பதில்களை அழகிரி ஆங்கிலத்தில் வாசிக்கலாம். துணைக் கேள்விகள் கேட்கப்படும் போது ஆங்கிலத்தில் அல்லது இந்தியில் அழகிரியால் பதிலளிக்க முடியாதென்பதால் அவரது இணையமைச்சர் துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கலாம் என்பதே அழகிரியின் மொழிப்பிரச்சினைக்கு சபாநாயகர் முன்னிலையில் காணப்பட்ட தீர்வாகும்.

நேற்று முன்தினம் அழகிரி காங்கிரஸ் எம்.பி.யான சரண்தாஸ் சமர்ப்பித்திருந்த கேள்விக்கு அழகிரி ஆங்கிலத்தில் பதிலை வாசித்தார். கிளப்பப்பட்ட துணைக் கேள்விகளுக்கு அழகிரியின் அனுமதியைப் பெறுவது போன்று பாவனை செய்து கொண்டு இணையமைச்சர் பதிலளித்தார்.

'அமைச்சர் அழகிரி முதற்தடவையாகப் பதிலளித்திருக்கிறார். அவர் பதிலளித்த முதற்கேள்வி என்னுடையதாக இருப்பது எனக்குப் பெருமையாக இருக்கிறது. அதற்கு நான் கொடுத்து வைத்திருக்கிறேன்' என்று சரண்தாஸ் மஹாந்த் கிண்டலாக சபையில் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவம் புதுமை இவரிடம் கேட்டோம்

**'பாராளுமன்றத்துக்கு வந்த பின்னர்தான் இந்தச் சபைக்கா மக்கள் எங்களை வாக்களித்து அனுப்பினார்கள் என்ற கவலை ஏற்பட்டது'**



எனது தந்தையின் மரணத்திற்கும் ஊடகத்துறை பணியை நான் இழக்க வேண்டி ஏற்பட்டதற்கும் அரசியல் காரணமாக அமைந்ததே எனது அரசியல் பிரவேசத்திற்குக் காரணம் என ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் காலி மாவட்டத்திலிருந்து புதிதாகப் பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்ட எம்.பி.யான மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

Saturday மெயிலுக்கு வழங்கிய சிறப்புப்பேட்டியிலேயே மனுஷ நாணயக்கார இவ்வாறு கூறினார். அவரது பேட்டியின் விபரம் வருமாறு;

**கேள்வி: உங்களது கல்வி மற்றும் குடும்பப் பின்னணி பற்றி?**

**பதில்:** காலி மகிந்த கல்லூரியிலேயே நான் எனது பாடசாலைக் கல்வியை மேற்கொண்டேன். பின்னர் றுகுணு பல்கலைக்கழகத்திற்கு அனுமதி கிடைத்த போதிலும் குடும்ப நிலைமை காரணமாக தொழிலுக்கு செல்லவேண்டியதாகிவிட்டது. ஊடகத்துறையில் நான் 4 வருடங்கள் பணியாற்றினேன். இதன்போது ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறை டிப்ளோமா கற்கை நெறியை பூர்த்தி செய்து பின்னர் சுவர்ணவாஹினியில் பணியாற்றிவிட்டு இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் செய்தி ஆசிரியராக பணிபுரிந்தேன். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் எனது ஊடகத்துறைப் பணியை இழக்க வேண்டி ஏற்பட்டமையினாலேயே நான் அரசியலில் போட்டியிடத் தீர்மானித்தேன். இதனடிப்படையில் தென்மாகாண சபைக்கு இருமுறை போட்டியிட்டு வெற்றி பெற்றதுடன்,கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐ.தே.க. சார்பில் காலி மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்றம் தெரிவானேன். எனது தந்தை எனக்கு 11 வயதாக இருக்கும் போது 1989 ஆம் ஆண்டு வன்செயல்களில் ஜே.வி.பி. யினரால் கொல்லப்பட்டார். எனது தாய் ஓய்வுபெற்ற ஆசிரியை. எனக்கு ஒரு சகோதரரும் சகோதரியும் இருக்கின்றனர்.

**கேள்வி: உங்களது அரசியல் பிரவேசத்திற்கான காரணம்?**

**பதில்:** எனது தந்தையின் மரணத்திற்கும் அரசியலே காரணமாக அமைந்தது. எனது ஊடகத்துறை பணி இல்லாமல் போனமைக்கும் அரசியலே காரணமாக அமைந்தது. எனவே, இந்த வழிகளை மாற்றி புதிய அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே எனது அரசியல் பிரவேசத்திற்கான காரணம்.

**கேள்வி: அரசியலில் உங்களது நோக்கமும் இலக்கும்?**

**பதில்:** எமது பல பிரதேசங்கள் கட்சி, இன, அரசியல், விவகாரங்களால் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, கட்சி,இன,அரசியல் ரீதியில் மக்கள் பாதிக்கப்படாத அனைத்து இன மக்களும் நன்மை பெறும் அரசியல் முறையொன்று கொண்டுவரப்பட வேண்டும்.

அதுவே அரசியலில் எனது நோக்கம்.

இதற்கு மேலதிகமாக ஜனாதிபதி பிரதமர் பதவிகளுக்குச் செல்ல வேண்டுமென்று எதிர்பார்ப்புகள் எனக்குக் கிடையாது. மேற்குறித்தவாறு ஆரோக்கியமானதொரு அரசியல் சூழல் உருவாக என்னால் முடிந்தளவு செயற்படுவதே எனது இலக்கு.

**கேள்வி: முதலாவது பாராளுமன்ற அமர்வின் அனுபவம் எப்படி இருந்தது?**

**பதில்:** ஊடகவியலாளராக இருந்த போது பாராளுமன்றம் சென்று செய்தி சேகரிப்பிலும் ஈடுபட்டிருக்கிறேன். எனினும் சபைக்குள் எம்.பி.யாக முதன் முதலில் பிரவேசித்தபோது புதுமையானதொரு உணர்வு ஏற்பட்டது.நாட்டின் உயரிய ஸ்தானத்திற்கு தெரிவான 225 உறுப்பினர்களில் நானும் ஒருவனாக இருந்ததையிட்டு பெருமையாக இருந்தது.அந்த ஸ்தானத்திற்கு காலி மாவட்ட மக்கள் என்னைத் தெரிவு செய்து அனுப்பியுள்ளனர் என்ற சந்தோசத்தை உணர்ந்தேன்.

**கேள்வி:பாராளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் சபைக்குள் இடம்பெறும் சம்பவங்கள் பற்றி?**

**பதில்:** இன,மத கட்சி பேதங்களின்றி மக்களுக்குச் சேவை செய்ததன் மூலம் என்னால் பாராளுமன்றம் தெரிவாக முடிந்தது.பாராளுமன்றம் என்பது மிகவும் உயர்வான நிலையில் இருக்கும் என்ற நிலையிலேயே நாம் பாராளுமன்றம் வந்தோம்.எனினும் இங்கு வந்ததன் பின்னர் மக்கள் எமக்கு வாக்களித்து அனுப்பியது இந்த சபைக்கா என்ற கவலை ஏற்பட்டது.

இதில் நான் பாராளுமன்ற நடவடிக்கைகள், சம்பிரதாயங்கள் பற்றி குறிப்பிடவில்லை.பாராளுமன்றம் என்பது மக்களுக்கான சேவைகள்,தேவைகள் பற்றி பேசி செயற்படுவதற்கான தீர்மானங்களை நிறைவேற்றும் இடம். எனினும் இங்கு எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவருக்கு தனது கருத்தைக்கூட முன்வைக்க முடிவதில்லை.எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் பேசும்போது ஆளுந்தரப்பிலிருந்து பல உறுப்பினர்கள் எழுந்து இடையூறு ஏற்படுத்துகின்றனர்.வாத,பிரதிவாதங்களுக்கான உரிமையை நான் மறுக்கவில்லை. எனினும் இங்கு ஆரோக்கியமான வாத,பிரதிவாதங்களில் ஈடுபடாமல் இடையூறு செய்து தடங்கல் ஏற்படுத்துகின்றனர்.கருத்து சுதந்திரத்திற்கு இடமளிக்கப்படுவதில்லை.உலகின் பாராளுமன்றத்துக்குள்ள ஜனநாயகம் கூட இந்த பாராளுமன்றத்தில் இல்லை.இது கவலைக்குரியது.

**கேள்வி:அரசியல் தவிர்ந்த வேறு ஏதேனும் துறைகளில் ஆர்வம் இருக்கிறதா?**


**பதில்:** ஊடகத்துறையில் இன்னும் எனக்கு ஆர்வம் இருக்கிறது.எனினும் அரசியலிலும் மக்களின் பிரச்சினைகளுக்கு பதில் வழங்குவதையே நான் செய்து கொண்டிருக்கிறேன்.

**கேள்வி:மக்களுக்கான உங்களது செய்தி?**

**பதில்:** அரசியலை பொறுத்தவரை மக்கள் மனதை கொண்டு தீர்மானங்களை எடுப்பதை விடுத்து புத்தியை பயன்படுத்தி முடிவுகளை எடுக்கவேண்டும்.

**டிட்டோகுகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனச்சாட்சியுடன் உலகின் முதன் முதல் இயந்திர மனிதன்

தனது சொந்த 'வாழ்வையும்' 'மனச்சாட்சியையும்' உணரக்கூடிய உலகின் முதன் முதலான இயந்திர மனிதனை *(Robot)* ஸ்பெயின் வடிவமைத்திருக்கிறது. இந்த இயந்திர மனிதன் தன்னைக் கொள்வனவு செய்யும் மனிதர்களை மகிழ்வித்து அன்பு பாராட்டியுவும் அவர்களுக்கு படிப்பிற்கவும் அத்துடன் கூட்டாளியாகவும் இருக்குமென்று கூறப்படுகிறது.

*AISoy 1* என்ற இயந்திர மனிதன் இம்மாதம் முதல் விற்பனைக்கு வரவிருக்கிறது. முதன் முதலான சமூக இயந்திர மனிதனை *(Social Android)* ஸ்பெயினில் உள்ள ஏ.ஐ.சொய்ஸ் ரோபோட்டிக்ஸ் *(AI Soy Robotics)* என்ற நிறுவனமே தயாரித்திருக்கிறது. இத்தயாரிப்பை ஆய்வுகூடத்தில் இருந்து இந்த நிறுவனம் தற்போது வெளியில் கொண்டுவரவிருக்கிறது.

'மனச்சாட்சியுடைய இயந்திர மனிதன் உண்மையில் ஒரு விஞ்ஞானப் புனைகதை போன்று இருக்கிறது. ஆனால், யதார்த்தமே' என்று அதன் சிற்பிகளில் ஒருவரும் ஏ.ஐ.சோய்ஸ் நிறுவனத்தின் உற்பத்தி பொறியியல் மற்றும் அபிவிருத்திப் பிரிவின் தலைவருமான டீய்கோ சார்சியா கூறியிருக்கிறார்.

இந்த இயந்திர மனிதன் அதைப் பயன்படுத்துபவர்களை மகிழ்வித்து கூட்டாளியாகவும் இருக்கும். ஆனால்,அதன் முக்கிய இலக்கு ஏனைய எந்தவொரு பிராணியைப் போலவும் 'உயிர்வாழ்வதாகும்' இது புலனுணரும் தன்மை கொண்டதாகவும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தக் கூடியதாகவும் தீர்மானங்களை மேற்கொள்ள வல்லதாகவும் இருக்கிறது. 25 சதமமீற்றர் உயரமும் 1.5 [illegible] இயந்திர மனிதன் அநேகமாக ஒரு உயிர்வாழும் பிராணியேயாகும். பிராணிகளைப் போன்றே அதன் நடவடிக்கைகள் அமைந்திருக்கும். அதற்கு சுயமாகச் செயற்படும் தன்மையும் 'மனச்சாட்சியும்' இருக்கிறது என்றும் கார்சியோ விளக்கமளித்தார்.

உணவு,ஊட்டம்,பாதுகாப்பு போன்ற பல தொடர்ச்சியான அடிப்படைத் தேவைகளையும் அது கொண்டிருக்கிறது. தன்னைத்தானே ரசித்தல், மற்றவர்களுடன் கூடிவாழ்ந்து நேசமாகப் பழகுதல், அடையாளம் காணுதல், சுதந்திரமாகச் செயற்படுதல் போன்ற இயல்புகளையும் இந்த இயந்திர மனிதன் கொண்டிருக்கிறது.

இதுவரையில் தயாரிக்கப்பட்டிருக்கும் இயந்திர மனிதன் வகைகள் மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளையும் பதிலளிக்கும் சமிக்ஞைகளைக் காட்டுவதற்கான ஆற்றலையும் கொண்டிருக்கவில்லை. இது பாரிய ஆற்றல் கொண்டது. அதற்கு சொந்த வாழ்வும் காலமும் இருக்கிறது. அதன் செயற்பாடுகள் முன்கூட்டியே அறிந்துணர்ந்து கூற முடியாதவையாகும் என்று அதைத் தயாரித்தவர்கள் கூறுகிறார்கள்.

இந்த இயந்திர மனிதன் அனுபவங்களில் இருந்து கற்றுக்கொண்டு தனக்கேயுரித்தான பாணியில் அந்தந்த நேரங்களில் தனது பழக்க வழக்கங்களை பண்புகளை,செயற்பாடுகளை மாற்றியமைத்துக்கொள்ளக் கூடியது. இந்தப் புதிய வகையான இரு இயந்திர மனிதர்களை இரு குடும்பங்களிடம் தனித்தனியாக இருக்க அனுமதித்தால் இருமாத காலத்தில் அவை முற்றிலும் வேறுபாடான குணாதிசயங்களை வெளிக்காட்டும். ஏனென்றால் அவை வேறுபட்ட அனுபவங்களைப் பெற்றிருக்கும் என்று கார்சியோ கூறுகிறார்.

இந்த மாதம் முதல் மனச்சாட்சியுடைய இந்த இயந்திர மனிதனை மக்கள் வாங்கக்கூடியதாக இருக்கும்.அஐகுங்ஙு 1 இணையத்தளம் ஊடாகவே விற்பனை செய்யப்படும். இதன் உள்ளூர் விலை (ஸ்பெயின்) விலை இன்னமும் அறிவிக்கப்படவில்லை. ஆனால், ஏனைய நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்ட முந்தைய இயந்திரமனிதன் வகைகளை விடவும் விலை குறைவாகவே இருக்குமென்று தயாரித்த நிறுவனம் கூறுகிறது.

## திருமணத்தின் தர்க்கம்



'அப்பா, அப்பா...நான் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன்' என்று நான்கு வயதான ஜோன் தந்தையிடம் கூறினான். தந்தை அதற்கு 'ஜோன், திருமணம் செய்ய வேண்டுமென்றால் ஒரு பெண் வேண்டுமே' என்று கூறினார்.

ஜோன்: நான் ஒரு பெண்ணைக் கண்டு பிடித்து விட்டேன்.

தந்தை: யாரது?

ஜோன்: எனது பாட்டி.

தந்தை: என்ன, எனது அம்மாவை நீ திருமணம் செய்யப் போகிறாயா முட்டாளே...?

ஜோன்: ஏன் அவ்வாறு செய்ய முடியாது. நீங்கள் எனது அம்மாவைத் தானே திருமணம் செய்திருக்கிறீர்கள்.

## றோங் நம்பர்



அதிகாலை தொலைபேசி மணி அலறியது. ஆழ்ந்த நித்திரையில் இருந்த விமல் திடுக்குற்று எழுந்து தொலைபேசியை எடுத்தார்.

மறுமுனையில் இருந்து 'இது 2983645 தானே' என்று ஒரு பெண்மணி கேட்டாள்.

'இல்லை இல்லை, இது 2983642' என்று விமல் பதிலளித்தார்.

'மன்னிக்கவும் உங்களைத் தொந்தரவு செய்துவிட்டேன். அதற்காக வருந்துகிறேன்' என்று மறுமுனையில் இருந்து பெண் சொன்னாள்.

விமல் நச்சரித்துக்கொண்டு தொலைபேசியை அடித்தபடி வைத்தார். 'அது சரி எப்படியென்றாலும் நான் தொலைபேசியை எடுத்துத்தானே ஆக வேண்டும். அல்லது உங்களுக்கு றோங் நம்பர் என்று எவ்வாறு தெரியப்போகிறது?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மதுவுக்கு முற்றுப்புள்ளி கம'

'மதுவுக்கு முற்றுப்புள்ளி' (மத்தட்ட தித்த) என்ற திட்டத்தின் மூலம் இலங்கையில் மதுப்பாவனையை ஒழிக்க அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளபோதும் மதுவுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்குப் பதிலாக 'கம' போடும் வேலைகளும் மறுபுறத்தில் தீவிரமாக முடுக்கி விடப்பட்டுள்ளதைப் புதிதாகத் திறக்கப்படும் மதுபானசாலைகளின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது தெரிந்து கொள்ள முடிகிறது.

மதுப்பாவனையின் அதிகரிப்பினால் இன்று இலங்கை உள்ளிட்ட அனைத்து வளர்முக நாடுகளிலும் கலாசார சீரழிவுகள் பெருகிக்கொண்டு செல்கின்றன.

இலங்கையிலும் கூட மதுவரித் திணைக்களம்,கலால் திணைக்களம் என்பவை மது விற்பனையில் ஈடுபடுவோரைக் கண்காணிப்பதற்கென அரசினால் ஸ்தாபிக்கப்பட்டபோதிலும் கிராமங்களில் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் துணிச்சலுடன் செயற்பட்டுக் கொண்டேயிருக்கின்றனர்.

யுத்தம் நடைபெற்ற காலங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மதுபானங்கள் விற்பனை செய்யப்பட்டதை விட தற்போது இரு மடங்காக அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வடக்கில் அதிகரிக்கப்பட்டுள்ள ஹோட்டல்களினாலும் கிளப்களினாலும் போதைப்பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள அதேவேளை, கலாசாரச் சீர்கேடுகளும் பெருகிவருகின்றன.

யுத்தத்திற்கு முற்பட்ட காலப்பகுதியில் குடாநாட்டில் மாதாந்தம் மூன்று இலட்சம் லீற்றர் மதுபானம் விற்பனை செய்யப்பட்டதாகவும் தற்போது அது ஐந்து இலட்சமாக அதிகரித்துள்ளதாகவும் யாழ்ப்பாண மதுவரித் திணைக்களம் தெரிவிக்கிறது.

இலங்கையின் தயாரிப்பான DHL பியர் உட்பட அதிக விலைகூடிய மதுபானவகைகளே பெருமளவு விற்கப்படுவதாகவும் இங்கு 400 மதுபான நிலையங்கள் உள்ளதாகவும் குடாநாட்டிலுள்ள 30 விடுதிகளுக்கு மதுபானம் விற்பதற்குரிய அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் யாழ்.மதுவரித்திணைக்கள அதிகாரியொருவர் கூறினார்.

தற்போது குடாநாட்டில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளமையினால் வீதி விபத்துகளும் பெருமளவு இடம்பெறுகின்றன. தென்மாகாணம் உள்ளிட்ட ஏனைய பகுதிகளைச் சேர்ந்த உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளமையினால் பாடசாலை,பல்கலைக்கழக மாணவர்களும் போதையில் ஆர்வம் காட்டத் தொடங்கி விட்டனர்.

அத்தோடு,மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வவுணதீவு,கொக்கட்டிச்சோலை ஆகிய பிரதேசங்களில் மதுவரித் திணைக்களம் மேற்கொண்ட திடீர் சோதனையின்போது சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்யப்பட்டிருந்த பெருமளவான மதுபானங்கள் கைப்பற்றப் பட்டுள்ளன.

இவ்வாறு நுவரெலியா மாவட்டத்திலும் கடந்தாண்டு 15 மில்லியன் [illegible] மது பானம் விற்கப்பட்டுள்ளதாகவும் இம்மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 216 மதுபான விற்பனை நிலையங்கள் மூலம் 5222 மில்லியன் ரூபா திரட்டப்பட்டுள்ளதாகவும் மாவட்டச் செயலாளர் டபிள்யூ.பி.ஜி.குமாரசிறி கூறியுள்ளார்.

அத்தோடு,மலையகத்திலுள்ள பாடசாலைகள் மற்றும் கல்விக்கூடங்களுக்கு மத்தியில் மதுபான விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளதால் பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவது குறைந்து செல்வதாகவும் இப்பகுதி பெற்றோர் கூறுகின்றனர்.

அபின், கஞ்சா, கள்ளு, சாராயம், கசிப்பு, பீடி, சிகரெட், சுருட்டு போன்ற போதைப்பொருட்கள் விஞ்ஞான வளர்ச்சியினால் சிறிய அளவில் எளிமையான முறையில் ஹெரோயின் கொகேய்ன், மர்ஜுவானா,ஹஸீஸ் என்ற அழகிய பெயரில் மனித உயிர்களைக் கொன்றொழித்துக் கொண்டிருக்கின்றன.


மகிந்த சிந்தனையின் மதுவுக்கு முற்றுப்புள்ளி 'மத்தட்ட தித்த' வேலைத்திட்டத்தின் கீழ் பொதுஇடங்களில் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டிருந்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டதுடன், ஒரு சில பகுதியில் போதைப்பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்துள்ள அதேவேளை, வேறு பிரதேசங்களில் அதிகரித்துச் செல்கின்றது.

உலகிலுள்ள மதுப்பாவனையாளர்கள் ஒவ்வொரு மணிநேரமும் 10 இலட்சம் டொலர் பெறுமதியுள்ள மதுபானத்தை அருந்துகின்றனர்.அவ்வளவு மதுவையும் ஒரே இடத்தில் ஒன்றாகக் கொட்டினால் நான்கு கிலோமீற்றர் நீளமும் ஒன்றரை கிலோமீற்றர் அகலமும் இரண்டரை மீற்றர் ஆழமும் கொண்ட பெரிய ஏரியாக உருவாகுமென ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு இலங்கை உள்ளிட்ட அனைத்து நாடுகளிலும் பரவிக் காணப்படுகின்ற மதுபாவனையை வெறுமனே சட்டத்தின் வாயிலாகத் தடுத்து விட முடியாது. விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலமே இதனை இல்லாதொழிக்க முடியும் என்பதை அறிந்து அதன்படி நடப்போமேயாயின் ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்க முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழந்தைகளின் மூளையை விருத்தி செய்யும் கொழுப்பமிலங்கள்

எந்தக்குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவை நல்லவையாவதும் தீயவை ஆவதும்.. என்று பழைய பாடல்கள் பல உண்டு ஆனால்... இதுபுதுக்கதை குழந்தைகளில் 3 வயதாகும் வரை அவர்களது போசாக்கு அவர்களின் மூளை விருத்திக்கு முக்கியமானது. சில அத்தியாவசிய கொழுப்பமிலங்களை உடலினால் உற்பத்தி செய்ய முடியாது, இவ்வாறுபட்ட கொழுப்பமிலங்களை உணவினூடாகவே வழங்கவேண்டிய நிலையே காணப்படுகிறது.

கொழுப்பமிலங்'கள் என்றால் என்ன என்று கேள்வி மனதில் உருவாகும். நாம் கொழுப்புபற்றி அறிந்திருக்கிறோம். ஆம். அப்படி என்றால் அதென்ன, கொழுப்பமிலம். எல்லாம் புதிதாக ஏதோ ஒன்றா? அப்படியில்லை. கொழுப்பை உருவாக்கும் கட்டமைப்புக்கூறு என்றுதான் சொல்லவேண்டும். பூக்களைக் கொண்டு மாலை தொடுப்பதை அறிவோம். அதுபோலவே கொழுப்பமிலங்கள் கொண்டு கொழுப்புக்கள் உருவாகின்றன. என்றால் அர்த்த புஷ்டியாகத்தான் இருக்கும்.

எங்கள் சமுகத்தில் கொழுப்புணவுகள் குறித்த 3 வயது வரையான காலங்களில் கொடுப்பதுகுறைவு என்றுதான் கூறவேண்டும். ஏனென்றால் வயிற்றோட்டம் வருமா? எண்ணெய்ச்சாப்பாடு குழந்தைக்கு கொடுக்கலாமா? என்று மனதைப் பிடுங்கும் தாய்மை பயத்தின் காரணமாக இவற்றை ஒதுக்கி விடுகிறது.

மீன் உணவுகளில் காணப்படும் நிரம்பாத பல் கொழுப்பமிலங்கள் *Eiwsapentanoic acid EPA, Docosahexanoic Acid DHA Omega 3 fattyacids* இவை கர்ப்பிணித்தாய்மாரின் உணவிலும் குழந்தைகளின் உணவிலும் முக்கியம் வேண்டியவை. இவை கர்ப்பிணித்தாய்மார் பயன்படுத்துவதால் குறித்த தவணைக்கு முன் குழந்தை பிறத்தல், குறைந்த உடல்நிறையில் பிறத்தல் இவற்றைத் தவிர்க்கின்றது. அத்துடன் விற்றமின்கள் *A,D,K,E* இன் பரிமாற்றத்திற்கும் இவ்வகை கொழுப்பு கரைக்கும் இயல்பு கொண்டிருப்பதால் முக்கியம் பெறுகின்றது. இவ்வாறான நல்ல கொழுப்பு வகை உடலில் உற்பத்தி செய்யப்படுமா என்பது கேள்விக்குரிய விடயமாக அமைவதால் அவற்றை மீனில் இருந்து பெறமுடிகிறது. அதுவும் சிறுமீன்களில் என்றால் மிகையாகாது.



மூளை என்றால் என்ன வெறும் தசையல்ல அது ஒருவகை விசேடித்த நரம்பு என்றுதான் சொல்லவேண்டும். மில்லியன் கணக்கான நரம்புக்கலங்களால் உருவாக்கப்பட்ட ஒரு ஆற்றல் மிகு அங்கம். இங்கு கடத்தும் அமைப்புகளாக ஒரு கணினியை உள்ளே திறந்து பார்ப்பின் எக்கச்சக்கமான வயர்கள் காணப்படுகின்றன. அதுபோலவே நரம்புகளும் வயர்கள் போன்றவைதான். வயர்களை சுற்றி சிவப்பு, மஞ்சள், பச்சை என நிறமிட்ட உறை காணப்படுகிறது. அதுபோலவே நரம்பை சுற்றியும் மயலின் எனும் கொழுப்புசார் உறைகள் காணப்படுகின்றன. இவற்றின் விருத்திக்கெல்லாம் கொழுப்பமிலம் தேவை. எனவே மூளை விருத்திக்கு முக்கியம் தேவை என்பது இப்போது சொல்லாமலே புரியும் என்பது தான் உண்மை.

இவற்றைவிட பாலில் உள்ள லக்ரோஸ் மையநரம்புத் தொகுதியின் மயலினேற்றத்தை ஊக்குவிக்கின்றது. இதன் மூலம் நரம்புத்தூண்டுதல்களின் கடத்தலை துரிதப்படுத்துகின்றது. இதைவிட புரதத்தின் அடிப்படைக் கூறுகளான அமினோ அமிலங்களும் நரம்புக்கணத்தாக்கக் கடத்தலுக்கு மிகையளவில் முக்கியத்துவம் பெறுகின்றன. எனவே உணவு வகை, போசனை என்பது குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கு எவ்வளவு பங்களிப்பு செய்கின்றது என்பது இனி சொல்ல வேண்டிய ஒரு விடயமல்ல.

**டாக்டர்**
**வெ.நாகநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது மரணத்துக்கு காரணமாகும் 'தொழில்'

நமது தொழிலுக்கும் மரணத்துக்குமிடையில் தொடர்பிருப்பதாக அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் சவுத் ஆம்ப்டன் நகரிலுள்ள மருத்துவ ஆய்வுச்சபை சமீபத்தில் ஒரு ஆய்வு நடத்தியது. 16-74 வயதுக்குட்பட்ட ஆண், பெண், முதியவர் என 10 ஆண்டுகளில் பலியான 16 இலட்சம் பேர் பற்றிய விபரங்களின் அடிப்படையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

ஆய்வு முடிவுபற்றி அதன் தலைவர் டாக்டர் டேவிட் கோகன் கூறியதாவது;

உணவுப் பழக்கவழக்கங்கள், உடல் ஆரோக்கியம் ஆகியவற்றைத் தீர்மானிப்பதில் நமது தொழிலுக்கு முக்கிய பங்கு இருக்கிறது. பெயின்டர், கட்டுமானவேலை செய்பவர், வண்டி இழுப்பவர் என உடல் உழைப்பில் ஈடுபடுபவர்கள் போதைப் பழக்கத்துக்கு அடிமையாகி இறக்கும் வாய்ப்பு மற்றவர்களைவிட இரு மடங்கு அதிகம். உடைவடிவமைப்பாளர்கள், அழகுக்கலை நிபுணர்கள் போன்றவர்கள் வெளிநபரிடம் செக்ஸ் வைத்துக்கொள்ளும் வாய்ப்புகள் அதிகம். எயிட்ஸ், எச்.ஐ.வி. காரணமாக இவர்கள் இறப்பதற்கான வாய்ப்பு 9 மடங்கு அதிகம். கப்பலில் வேலை பார்ப்பவர்கள், மதுபானசாலை ஊழியர்கள் போன்றவர்களிடம் மதுகுடிக்கும் பழக்கம் அதிகமாகி சிறுநீரகம், கல்லீரல் பாதிப்புகள் ஏற்பட்டு இறக்கும் வாய்ப்பு அதிகம்.

1991, 2000 ஆம் ஆண்டுகளில் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் ஆய்வு நடந்தது. செக்ஸ் வாழ்க்கை, ஆரோக்கியம் ஆகியவை நமது தொழிலைப் பொறுத்தே அமைகின்றன. இத்தகைய தொழில்களில் ஈடுபடுபவர்கள் ஒழுக்கம், உணவுப்பழக்கம் ஆகியவற்றில் எந்தளவு கவனம் செலுத்த வேண்டும் என்று விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.



# ட்ருவிட்டரைப் பயன்படுத்துவோரில் அதிக வயதான மூதாட்டி மரணம்



ட்ருவிட்டரைப் பயன்படுத்துவோரில் அதிக வயதான இங்கிலாந்தைச் சேர்ந்த 104 வயது மூதாட்டி மரணமடைந்துவிட்டார்.

ட்ருவிட்டரைப் பயன்படுத்துவோரில் அதிக வயதானவரும் 56 ஆயிரம் தொடர்பாளர்களைக் கொண்டவருமான ஐவி பீன் என்பவர் பிராட்போர்டில் உள்ள மருத்துவமனை ஒன்றில் மரணமடைந்தார்.

இந்தக் கொள்ளுப்பாட்டி ட்ருவிட்டரில் தனக்கென ஒரு படையையே நண்பர்களாக வைத்துள்ளார். அவர் இறந்த மருத்துவமனையின் முகாமையாளர் மூதாட்டியின் உடல் நிலையைப் பற்றி அவர் ரசிகர்களுக்கு அவ்வப்பொழுது தெரிவித்துக்கொண்டிருந்தார். அவர் இறுதியாக மூதாட்டியின் மரண செய்தியைத் தெரிவித்தார்.

ஐவியின் உயிர் அமைதியாகப் பிரிந்தது. இந்தச் செய்தியை என்னால் உடனே உங்கள் அனைவருக்கும் தெரிவிக்க முடியவில்லை. அதற்காக என்னை மன்னிக்கவும் என்று அவர் மேலும் தெரிவித்தார். இந்தத் துயரச் செய்தியை அறிந்த பலரும் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்துள்ளனர்.

அவர் நினைவாக பேஸ்புக்கில் ஒரு பக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. தற்போதைய பரபரப்பான தலைப்பு இதுதான்.

ஐவி ஒரு முன்னாள் மில் தொழிலாளி. அவர் மருத்துவமனையில் இருக்கும்போதும் தன் நிகழ்வுகளை அவ்வப்போது தெரிவித்துக்கொண்டே இருப்பார். ட்ருவிட்டரைப் பயன்படுத்துவதற்கு முன் நான் முழு நாளும் உட்கார்ந்து கொண்டும் தூங்கிக் கொண்டும்தான் இருந்தேன் என்று அவர் அண்மையில் கூறினார்.

இந்த ஆண்டு அவர் பொப் பாடகர் பீற்றர் ஆன்ரேவைச் சந்தித்தார். இளம் பெண்களின் கரகோஷத்திற்கிடையே இந்த மூதாட்டியின் கன்னத்தில் முத்தமிட்டார் அந்த 37 வயதான பொப் பாடகர். இந்தப் புகைப்படத்தை தான் ஐவி தனது ட்ருவிட்டர் பக்கத்தில் வைத்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இக்கம் பக்கம்

# இதுவா நாகரிகம்?

இன்றைய சமுதாயத்தினர் நாகரிகம் என்ற போர்வையினுள் கட்டுண்டு இருக்கிறார்கள். இள வயதினர் மட்டுமல்ல வயது கூடியவர்களும் நாகரிகம் என சொல்லிப் பல சீரற்ற விடயங்களைச் செய்கிறார்கள். இவற்றைப் பார்க்கும் மாணவ சமுதாயம்நான் ஏன் இப்படி நடக்கக்கூடாது என்று எண்ண முற்படுகின்றது.

இன்று பாடசாலையில் கல்வி கற்பிக்கிற ஆசிரியர்கள் நிறுவன உத்தியோகத்தர்கள் (எல்லோரும் அல்ல) கூட கட்டைப் பாவாடை அணிந்து செல்கின்றனர். இதனைப் பார்க்கும் ஒரு பாடசாலை மாணவி இவர்களே இப்படி உடையணிகிறார்கள் தானே நான் அணிவதில் தப்பில்லை என எண்ணத் தோன்றுகிறது

பொது நிகழ்வுகளுக்குச் செல்லும் போதும் தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்ற உடையணிந்து செல்ல வேண்டும். அவர்களைப் பார்த்து ஏனையோர் பின்பற்றி நடக்கக் கூடியதாக இருக்க வேண்டும். ஆனால் மகளிர் அமைப்பு என்ற பெயரில் சில நிகழ்வுகளில் பங்கு பற்றும் இந்த அமைப்புகளைச் சார்ந்த சிலர் ஏனைய கலாசார உடையணிந்து வருவதை காணக் கூடியதாக இருக்கிறது.

இது அவர்களுக்கு நாகரிகமாகத் தெரியலாம். ஆனால் இவர்களைப் பார்த்து அங்கு வந்து இருக்கும் சபையோர் விமர்சிக்கிற மாதிரி இருக்கக்கூடாது. அவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். அதற்காக அவர்கள் வேறு உடைகள் அணியக்கூடாது. சேலை தான் அணிய வேண்டும் எனக் கூறவில்லை. அவர்கள் பொது நிகழ்வுகளில் பங்கு பற்றும் போது மட்டும் தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்றவாறு உடையணிந்தால் அவர்களை வேறு எவரும் விமர்சனம் செய்ய முடியாது. வேறு தமது விடயங்களுக்குச் செல்லும் போது பண்பாடான வேறு உடைகளை அணிந்து செல்லலாம். அதில் தவறு இல்லை.

நான் நேரில் கண்ட சம்பவம் ஒன்றை இங்கு தர விரும்புகிறேன். கடந்த கேதார கௌரி விரத இறுதி நாள் எல்லோரும் பக்தியுடன் 21 நாட்கள் விரதமிருந்து இறுதி நாளான அன்று நூல் கட்டும் நாள். நானும் கோயிலுக்குச் சென்றிருந்தேன். ஆண்கள், பெண்கள் என நூற்றுக் கணக்கானோர் குங்குமப் பூஜை, சிவலிங்கப் பூஜை என செய்து கொண்டிருந்தனர். அப்போது எல்லோருடைய பூஜையையும் குழப்பும் வகையில் கால்சலங்கை ஒலி கேட்டது. இரு சிறுவர்கள் அதாவது பாடசாலை மாணவர்கள் பேசிக்கொண்டிருந்தது என் காதில் கேட்டது. அந்தப் பெண்களின் பாவாடையின் அளவைப் பார். பாவாடையில் பாதி வெட்டி இருக்கு. இவர்களை விமர்சனம் செய்ய வைத்தது அவர்களின் உடை. எனக்கு அந்த சிறுவர்கள் மீது கோபம் வரவில்லை. எல்லோரும் விமர்சிக்கும் படி உடையணிந்து விரதம் அனுஷ்டிக்க வந்த பெண்கள் மீது தான் கோபம் வந்தது. பக்தியோடு வழிபட வேண்டிய தலம் எல்லாம் இன்று நாகரிகம் என்ற போர்வையாய் பாதை மாறிவிட்டது. இனி வரும் காலங்களில் யாழ். மக்களின் நாகரிகம் எப்படி எல்லாம் மாறுமோ? விடை காண முடியாத வினாவாகவே காணப்படுகிறது.

**சுபா**

# நடமாடும் நோய்க்கூடம் செல்போன்






இப்போது செல்போன் இல்லாதவர்களே இல்லை என்ற அளவுக்கு அனைவரிடமும் செல் போன் இருக்கிறது. ஆனால் செல்போனை ''நடமாடும் நோய்க் கூடம்'' என்று விஞ்ஞானிகள் வர்ணித்து உள்ளனர்.

செல்போனில் உள்ள அசுத்தங்கள் தொடர்பாக இங்கிலாந்தைச் சேர்ந்த மருத்துவ விஞ்ஞானிகள் குழு ஒன்று ஆய்வு நடத்தியது.

அதில் கழிவறை கோப்பையில் உள்ள கிருமிகளை விட செல்போனில் அதிக அளவு கிருமிகள் இருப்பது தெரிந்தது.

அதாவது கழிவறை கோப்பையை விட 18 மடங்கு அதிகமாக செல்போனில் கிருமிகள் இருந்தன. ஒரு பொருளில் குறிப்பிட்ட அளவு வரை பக்றீரியாக்கள் இருந்தால் அது ஆபத்து இல்லாததாக கருதப்படுகிறது. ஆனால் செல்போனில் குறிப்பிட்ட அளவை விட 10 மடங்கு அதிகமாக பக்றீரியா உள்ளது.



மிகவும் அசுத்தமாக உள்ள செல் போனில் 39 மடங்கு அதிக பக்றீரியாக்கள் உள்ளன.

அசுத்தமான செல்போன்களை பயன்படுத்தும் போது அதன்மூலம் கிருமிகள் நமது உடலில் புகுந்து வயிற்று உபாதை, மூச்சுக் கோளாறு போன்ற பல்வேறு நோய்களும் தாக்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கபிலரின் கடைசி வாக்குமூலம்

உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை வாய்மொழிக் கபிலர், நீரினும் இனிய சாயலன் ஆகிய பாரியின் இனிய தோழர் அறிமுகம் பழக்கமாகி, பழக்கம் நட்பாகி, நட்பு உரிமை கலந்த உறவாகிக் கேண்மையாகி விடுகிறது என்பதன் வரலாறு இவர்கள் உறவு எனலாம்.

பறம்புமலை சாட்சியாய் இவர்கள் பழகிய பொழுதுகளின் அழகிய பதிவுகள் கபிலர்தம் பாடல்கள் என்றால் மிகையாகாது. நின்ற சொல்லர் நீடுதோன்று இனியர் என்று கபிலரின் நற்றிணைத் தலைவி பேசும் தொடர்கள் பாரிக்கும் பொருந்தும். கபிலர் பாரியுடன் இருந்து பருகிய சுனைநீர், உவலைக் கூவற்கீழ் மான் உண்டு எஞ்சிய கலுழீநீரானபோதும் தேன் மயங்கு பாலினும் இனியதாகச் சுவைப்பது அவர்தம் நட்பின் சுவையே.

காதல் கடந்த அன்பில் ஒருபடி மேலே போய்க் கடவுளாகவே பாரியைக் கருதுகிறார் கபிலர் அதனால் தான்,

**நல்லவும் தீயவும் அல்ல குவி இணர்ப்**
**புல்இலை எருக்கம் ஆயினும் உடையவை**
**கடவுள் பேணேம் என்னா ஆங்கு**
**மடவர் மெல்லியர் செல்லினும்**
**கடவன் பாரி கை வண்மையே**
**(புறம்-106)** என்று பாடுகிறார்.

பாரியைத் தவிர வேறு யாரையும் பாடா மரபுடைய கபிலர்தம் பாராட்டுரைதான் மூவேந்தர்களையும் முற்றுகை இட வைத்தது என்பது உண்மை. முந்நூறு ஊர்களும் தம்மை நாடிவந்த இரவலர்க்கு நல்கி, கலையும் இசையும் களிநடம் புரியப் போரை முற்றத் துறந்த பாரியது பறம்பைப் பகைவர் முற்றுகை இட்டபோது கபிலர் பாடுகிறார்:

**கடந்து அடுதானை மூவிரும் கூடி**
**உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கு அரிதே**
**முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நல்நாடு**
**முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்**
**யாமும் பாரியும் உளமே,**
**குன்றும் உண்டு நீர் பாடினிர் செலினே**
**(புறம்-110)**

இப்போது நாடு இல்லை. மலைதான் உண்டு. மலை நிகர்த்த பாரி உண்டு. இடையில் தான் உண்டு. யார் வேண்டுமோ, ஆடுநர் பாடுநராகச் சென்று வேண்டினால் பாரி தன்னையே ஈவான். மலையே வேண்டினும் நல்குவான். இதுவரை அவனைத் தவிர வேறு யாரையும் பாடாத அவனிடம் கபிலனாகிய என்னை இரந்தால் தயங்காது தருவான் என்று குறிப்பால் உணர்த்தும் கபிலர்கோமான், பாரி சென்னால் உம்மையும் பாடுவேன் என்று சொல்லாமல் சொல்கிறார் எனலாம்.

அதனால்தான், பாரி மறைந்த பின்னர் பாரிமகளிரைக் காக்கும் பொருட்டுப் பிறமன்னர்களைப் பாடும் நிலைக்குக் கபிலர் தள்ளப்படுகிறார். அப்போதெல்லாம் நொந்த உள்ளத்தின் உள்ளே இருந்து வெந்த சொற்களாய் வெளிப்படும் கவிதைகளில் பாரியை இழந்த பறம்புமலையின் நீலவண்ணச் சோகமாய் நிலைத்து நிற்கும் காட்சி அவர்தம் புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றில் புலனாகிறது. பயில்வோர் நெஞ்சைப் பிழியும் அந்தச் சோகக்கீதங்கள் கையறுநிலைப் பாடல்களாகக் கபிலரின் வாக்கில் பிறந்து அமரத்துவம் பெற்று நிற்கின்றன. அவற்றின் உச்சம் அவர்தம் இறுதிப் பாடல் எனத்தகும் புறப்பாடல்.

பறம்புமலையளவு உயர்ந்த வாழ்வு, பெண்ணையாற்றருகே உள்ள குன்றளவு குன்றிய சோகத்தில் நின்ற கபிலருக்கு அக்குன்றின் தோற்றம் பறம்புமலையின் பலாப்பழத்தை நினைவூட்டி விட்டதுபோலும். குறிஞ்சி வேடர்கள் பலநாள்பட வைத்து உண்ண வேண்டிய பலாப் பழத்தை குரங்கு தான் உண்ண கிழித்த-அல்ல, கிழிந்த-கோபமும் வருத்தமும் கூடிவரப் பாடுகிறார். தொட்டதும் கிழியும் அளவிற்குப் பக்குவமாய்ப் பழுத்த அப்பலாப் பழமோ, முழவு எனும் இசைக்கருவிபோல் தோற்றம் உடையது. ஆதிக்க வர்க்கக் குரங்கின் கைப் பலாவாய் இசைநிறை பாரி இருந்து இறந்த சோகக்காட்சியை மங்கிய சுடராய் மனதில் நிறைத்துக் கபிலர் பாடல் கண்முன் விரிகிறது.

வள்ளல் பாரியின் கடைசிக் கணம், உடன் தானும் மடியச் சித்தமாகிக் கபிலர் துடிக்கிறார். கை காட்டி மறுக்கிறான் பாரி ஒழிக என்று இறுதிக்குரல் கொடுத்துக் கண்மூடிவிடுகிறான். நட்பில் பூத்த உரிமையில் மரணம் கூடப் பிரிக்கமுடியாத நிலையில் கலக்கத் துடித்த கேண்மை உறவை மறுதலித்துவிட்டான் பாரி. கலந்த கேண்மைக்கு ஒவ்வாய் என்று பாரி தம்மை ஒதுக்கிவிட்டு ஏனோ என்று எண்ணி எண்ணிக் கண்ணீர் சிந்திக் கலங்குகிறார் கபிலர். எனினும் கடமை மறவாமல், பாரி மகளிரைக் காத்து வந்த கபிலர் அவர்களைப் பார்ப்பாற்படுத்துத் தனித்து வந்தபின் கடைசிக்கண்ணீர் வடிக்கிறார்.

இப்பிறவி நீங்கி, மறுபிறவி எடுத்து வாழும் காலத்தில் இப்பிறவியில் போலவே இனிய நட்பில் உடன் உறையும் அற்புத வரம் அருளவேண்டும். எப்போதும், எப்போதும் இடையீடு இல்லாமல் உன்னுடனேயே உறைந்து வாழும் உரிமையை உன்னத வாழ்வை, உயர்ந்த ஊழ் கூட்டுவிக்கட்டும் என்று வேண்டுகிறார். காரைக்காலம்மை ஈசனிடம் வேண்டிய வரத்துக்கு முன்னோடியாய்க் கபிலர் உயர்ந்த ஊழிடம் வரம் வேண்டும் அப்பாடல் பின்வருகிறது.

**கலை உணக் கிழிந்த.........**
**..........**
**யான் மேயினேன் அன்மையானே ஆயினும்,**
**இம்மைபோலக் காட்டி, உம்மை**
**இடைஇல் காட்சி நின்னோடு**
**உடன் உறைவு ஆக்குக உயர்ந்த பாலே**
**(புறம்-236)**

பொதுவாய், உயர்ந்த நட்புக்கு ஒரு சான்றாகக் கோப்பெருஞ் சோழன் பிசிராந்தை யாரைச் சுட்டுவது வழக்கம். முகங்காணாதே அகத்தால் ஒத்துணர்வு கொண்டு மரணத் தருவாயில் ஒருங்கிருந்து உயிர் விட்ட பெருமக்கள் அவர்கள். அப்படியொரு வாய்ப்புத் தனக் கிட்டாது போன வருத்தத்தைக் கபிலர் தமது கடைசி வாக்குமூலமான கவிதையில் வைத்து முடிப்பது அவர்தம் உள்ளத்தின் உள்ளூரப் பொதிந்த நட்பின் ஆழத்தை, அதன் அழுத்தமுறு அன்பை, இறுக்கவுணர்வை இறக்கிவைக்கும் சுமைதாங்கிக் கல்லாக்கி, தென்பெண்ணை யாற்றுக் (கபிலர்) குன்றைக் காலகாலத்திற்கும் சாட்சியாக்கி வைத்து வெளிப்படுத்திவிடுகிறது. கபில பாரியின் கடைசி வாக்குமூலங்களைத் தாங்கிய இப்புறநானூற்றுப் பாடல் நட்பின் சாசனம்.

## இலக்கிய சுவை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுங்கும் சிற்பம்

எகிப்திலுள்ள 'கிஸா' என்ற சிற்பம் தான் மிகப்பிரபலமான ஸ்பிங்ஸ் என்றாலும் இன்னொன்றும் உள்ளது என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.கிரேக்க புராணக் கதைப்படி முதன்முதலில் இருந்த ஸ்பிங்ஸ் இறக்கைகளும் சிங்கத்தின் உடலில் பெண்முகமும் கொண்டது.தீப்ஸ் நகருக்குள் வரும் சுற்றுலாப் பயணிகளை இந்த உருவம் கவர்ந்திழுக்கும். அது கூறும் புதிருக்கு விடை சொல்லாதவர்களை அந்தச் சிற்பம் விழுங்கி விடுமாம்.

அது கூறும் புதிர் இதுதானாம். 'இந்தப் பிறவிக்கு ஒரு குரல் இருக்கும்;முதலில் நான்கு கால்களும் பின்னர் இரண்டு கால்களும் கடைசியில் மூன்று கால்களும் இருக்கும்.அது என்ன?' இடீபஸ் என்பவர் அந்தப் புதிருக்கான விடையைக் கூறி ஸ்பிங்ஸைத் தோற்கடித்தாராம். அவர் சொன்ன விடை 'மனிதன்' .குழந்தையாக பிறந்த மனிதன் நான்கு கால்களால் தவழ்கிறான்; வளர்ந்த பின் இரண்டு கால்களால் நடக்கிறான்;வயதான பின் ஊன்றுகோலைப் பயன்படுத்துவதன் மூலம் மூன்று கால்களைப் பெறுகிறான்.எகிப்தியப் புராணக் கதைப்படி ஸ்பிங்ஸ் என்பது ஓர் அசிங்கமான இறக்கையற்ற சிங்கத்தின் உடலோடு கூடிய ஒரு ஆணின் உருவம்.கிரேக்க மொழியில் ஸ்பிங்ஸ் என்றால் 'கழுத்தை நெரித்துக் கொல்பவன்' என்று பொருள்.






## நத்தைக்கு எத்தனை பற்கள்?



வீடு போன்ற பெரிய கூட்டைச் சுமந்து கொண்டு மெதுவாக ஊர்ந்து செல்லும் நத்தையைப் பார்க்கும் சிறுவர்களுக்கு வேடிக்கையாக இருக்கும்.மழை அதிகமாகப் பெய்யும் இடங்களிலும் ஈரப்பசையுள்ள இடங்களிலுமே இவை அதிகமாக வாழ்கின்றன.நத்தையின் கூடுகள் கல்சியம் கார்பனேட்டால் ஆனவை.உண்ணும் உணவிலிலுள்ள இச்சத்தைக் கொண்டு கூடுகளை உருவாக்கிக் கொள்கின்றன.சுண்ணாம்புக்கல் படிந்துள்ள இடங்களிலும் நத்தைகள் அதிகமாகக் காணப்படும்.நத்தையின் வாயில் மொத்தம் 135 பல் வரிசைகள் உள்ளன. ஒவ்வொரு வரிசைக்கும் 105 பற்கள் வீதம் மொத்தம் 14 ஆயிரத்து 175 பற்கள் உள்ளன.

# குறுக்கெழுத்துப்போட்டி - 45

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ♣ | 5 |
| 6 | ♣ | 7 | 8 | ♣ | 9 |
| 10 | 11 | 12 | ♣ | 13 | 14 |
| ♣ | 15 | ♣ | 16 | 17 | ♣ |
| 18 | 19 | 20 | ♣ | 21 | 22 |
| 23 | 24 | 25 | ♣ | ♣ | 26 |

**இடமிருந்து வலம்**

1. மனைவியை இழந்தவன்
7. நூறு இலட்சங்கள் சேர்ந்தால் வருவது (திரும்பியுள்ளது)
10. சோகம் என்றும் சொல்லலாம் (திரும்பியுள்ளது)
13. காதலுக்கும் இதற்கும் தொடர்புண்டாம்
16. பொருட்களுக்கு அரசு அறவிடுவது (திரும்பியுள்ளது)
18. கடிதம் என்றும் சொல்லலாம்
21. நிலம் (திரும்பியுள்ளது)
23. கயிறு செய்ய பயன்படுவது

**மேலிருந்து கீழ்**

1. இளமைப் பருவத்தை இப்படியும் சொல்வார்கள்
3. காட்டு விலங்கு ஒன்று (குழம்பியுள்ளது)
4. அரசன் (தலைகீழ்)
5. இதுவும் குட்டி போடும் என்பர்
11. 365 நாட்கள் சேர்ந்தால் வருவது
13. பெண்களின் ஆடைகளில் ஒருவகை
18. இலங்கையில் இதனை ஒழிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது
20. கால் நடைகளின் தீவனம் (தலைகீழ்)
22. நண்பன் (தலைகீழ்)

பெயர் : ..............................................

முகவரி : ..............................................

..............................................

## குறுக்கெழுத்துப்போட்டி - 43 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. ஈரான் | 1. ஈட்டி |
| 4. பொடா | 2. தராசு |
| 6. தட்டம் | 3. பாட்டன் |
| 11. சுட்டி | 5. தடாகம் |
| 14. தரி | 17. பீடை |
| 16. பாடை | 19. காடு |
| 19. காளை | 20. களை |
| 21. பீதி | 22. திசை |
| 23. கடுகு | |
| 26. கசை | |

250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

**நா.சுந்தரலிங்கம்,**

தொட்டிலடி மத்தி., சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம்.

## பாராட்டுப்பெறுவோர்

01. வி.தர்ஷினன், சரஸ்வதி மழலைகள் கல்விப்பூங்கா, கைதடி மேற்கு, கைதடி.
02. எம்.பி.அகிலன், இல. 39, கல்லூரி வீதி, திருகோணமலை.
03. எம்.எப்.எம்.ரிம்ஸாத், இல. 115, அண்ணல் வீதி, மாஞ்சோலைச்சேனை, கிண்ணியா-3.
04. எம்.எஸ்.கனஹா கந்தசாமி, க/இந்து கல்லூரி, பேராதனை.
05. திருமதி ஏ.சர்மிளா, இல. 620 நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

உங்கள் விடைகளை
**Saturday மெயில்**
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு–15
என்னும் முகவரிக்கும் அனுப்புங்கள்...

# அர்த்தம் இதுதான்



முற்காலத்தில் பறவை இறகுகளின் முனையில் கூர்மையாகச் சீவி சாயத்தில் அல்லது மையில் தோய்த்து எழுதுவது வழக்கம்.லத்தீன் மொழியில் 'பென்னா' என்றால் 'பறவையின் இறகு' என்று அர்த்தம்.இதுவே ஆங்கிலத்தில் 'பென்'னாகவும் தமிழில் பேனாவாகவும் மாறியது. இறகினால் ஆன பேனா உபயோகத்தில் இருந்த காலத்தில் இறகுகளை கூர்மையாகச் சீவ சிறிய கத்தியொன்றை வைத்திருந்தனர்.அந்தக் கத்தி 'பென் நைப்' எனப்பட்டது.அதையே நாம் தமிழ்படுத்தி 'பேனாக் கத்தி' என்று அழைக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட 'நடிகர்கள்'



நடந்து முடிந்த யுத்தம் பலருக்கு வெகுமதியாக அளித்துச்சென்ற பரிசு ஊனம்.. இந்த ஊனமுற்ற மனிதர்கள் இணையங்கள் முதல் ஏழை இதயங்கள் வரையில் இன்று வியாபாரமாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.இதில் வேடிக்கை என்னவென்றால்,உண்மையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டோரை விட பாதிக்கப்பட்டோர் போன்று 'நடிப்பவர்கள்' அதிகம்! 'இவர்கள் சுரண்டல்' தொழிலை மேற்கொண்டு நலமடைகின்றனர்.

இந்தச் சுரண்டல் தொழிலை மேற்கொள்பவர்களின் உண்மை நிலையை அறியாத மக்களும் அவர்கள் மீது இரக்கம் காட்டி பணங்களையும் பொருட்களையும் அளித்து வருகின்றனர். குறிப்பாக இவர்களின் 'லீலைகள்' தொடரும் அரங்கங்களாக பஸ்கள் மற்றும் பஸ் நிலையங்கள் விளங்குகின்றன.

போரினால் ஒன்றில் தானோ அல்லது உறவுகளோ பாதிக்கப்பட்டதாகக் கூறி மேற்படி கைங்கரியத்தை மேற்கொண்டு வரும் 'சுரண்டல் தொழிலாளிகள்' தமது தொழிலைச் செவ்வனே செய்து முடிப்பதற்கு இலகுவாக ஒரு மருத்துவ அதிகாரியின் ஒப்பம் பொறித்த இரங்கல் பத்திரம் வைத்திருப்பார்கள்.அன்றேல் சமூக அக்கறைதாரரின் இறப்பர் முத்திரையும் ஒப்பமும் பொறிக்கப்பட்ட பத்திரம் வைத்திருப்பார்கள்.

அந்த 'இரங்கல் பத்திரம்' பல பிரதிகளாக்கப்பட்டு பஸ்களில் பயணிகளிடம் அவற்றை அளித்து இலகுவாகப் பணம் கறக்கின்றனர். குறித்த பஸ்களில் நித்தமும் பயணிக்கு இவர்களின் 'திருகுதாளம்' வெறுப்பையும் விசனத்தையும் உண்டு பண்ணுவதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பிட்ட அந்த இரங்கல் பத்திரமான நோய் நிர்ணய அட்டையுடன் சிலர் தமது படத்தையோ அல்லது குடும்பப் படத்தையோ இணைத்து அதன் மூலமும் அனுதாபத்தைச் சம்பாதிக்கின்றனர். அந்தப் பத்திரங்களைப் பார்க்கின்ற பலரும் அதனைப் படிப்பதைவிட பார்த்து பரிதாபமடைந்து தம்மால் இயன்ற 'தர்மச் செயலை' மேற்கொள்கின்றனர்.

ஆயிரம் பொய்களைச் சொல்லி கறக்கின்ற பணத்தின் மூலம் மதுபானங்களை அருந்தி வரும் அவர்கள் சமூகவிரோதச் செயல்களிலும் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.இதற்குப் பெண்களும் விதிவிலக்கல்ல.

போர் முடிவுற்று ஓராண்டிற்கும் மேலாகிவிட்டது. இன்னமும் அதனைப் பற்றியே பலரும் பேசிக்கொண்டிருக்கின்றனர். அதன் மூலம் 'நடிப்புச் சுதேசிகள்' இலாபமும் ஈட்டிக்கொள்கின்றனர்.

போரினால்- உண்மையில் பாதிக்கப்பட்டவர்களின் நிலைகளை உணர்ந்து மனிதாபிமான அடிப்படையில் அவர்களுக்கு உதவுவது எமது தார்மீகக் கடமை. ஆனால், அவர்கள் போல் நடிப்பவரை என்னவென்று கூறுவது?

இவர்களுடைய நடவடிக்கைகளைக் கண்ணுற்று விசனமடைந்த ஒருவர் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்; 'நடைபெற்று முடிந்த போர் சுரண்டல் வர்க்கத்தைச் சார்ந்த பலரது வாழ்வுக்கு வித்திட்டுள்ளது. இவர்கள் வேறு நோய்நிலை காரணமாக வைத்தியசாலையில் இருந்து வைத்தியரால் வழங்கப்படும் நோய்நிர்ணய அட்டையில் தமது குடும்பப் படங்களையும் இணைத்து யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளோம். சிகிச்சைக்கு பண உதவி வேண்டும் என்பன போன்ற பொய்களை பேசி அனுதாபம் சம்பாதிக்கும் அதேவேளை பணத்தையும் கறக்கின்றனர்.



இப்படியானவர்களைக் கண்டால் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். உண்மையில் பாதிப்புற்றவரை இனங்கண்டு உதவ வேண்டும்.

கையில் ஒரு அனுதாபக் கடதாசியை நீட்டியவாறு கண்களில் நிறைபோதை ஏற்றியவாறு தள்ளாடிய நிலையில் 'இரங்கல் கவி பாடி' மக்கள் மனங்களை ஈர்க்கின்றனர். இவர்கள் பேசும் போது 'மதுவாடை' வயிற்றைப் புரட்டுகிறது.இத்தகைய ஆசாடபூதிகளின் பொய்முகங்கள் கிழிபடும் காலம் தான் எப்போ? என்று விசனம் வெளியிட்டார்.

பிச்சை எடுப்பதற்கே தடை விதிக்கப்பட்டிருக்கும் நிலையில் இவர்களின் இத்தகைய செயற்பாடுகளைக் கண்டும் காணாதது போன்றிருக்கின்ற பலரும் முதலில் இவர்கள் வாழ்வில் அபிவிருத்தியை உண்டுபண்ணி மேலதிக கனவுகளைப் பின்னர் பேசலாம்.யாழ்ப்பாணம் 'குட்டிச் சிங்கப்பூர்' என்று பலராலும் பேசப்படுகின்றது. ஆனால் அதே நாட்டிலுள்ள வளர்ச்சிகள் இங்கு ஏற்படப்போவது எப்போ? அப்போதும் இந்தச் 'சுரண்டல் வர்க்கம்' நடமாடுமா?

போரினால் பாரிய அழிவுகளைச் சந்தித்த ஜப்பான் இன்று தொழில்நுட்பத்தில் வான்முகட்டை விஞ்சிச் சாதிக்கவில்லையா? அதேநிலை நம்நாட்டவராலும் உருவாக்கமுடியும். 'இந்தச் சுரண்டல் வர்க்கமும்' வீறுபெற்று- விழிப்புற்று உழைத்தால்!

எஸ்.ரூபனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐஸின் நிறைவேறாத ஆசை



எந்திரன் விழாவுக்கு ஒரு இளவரசியின் கம்பீரத்தோடும் அழகோடும் வந்திருந்தார் ஐஸ்வர்யாராய். இவரை அழைப்பதற்கு முன்பு ஐஸ் பற்றி விவேக் கொடுத்த பில்டப்புகள் எல்லாமே அசர வைக்கும் ஆங்கிலத்தில். (அப்பதானே அவருக்கும் நன்றாகப் புரியும்?) சற்றே வெட்கத்தோடு மேடையேறினார் ஐஸ். ஆனால் அதற்கு முன்பாகவே நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களிடம் ஐஸ் ஒரு விஷயத்தை வலியுறுத்தியதாகத் தெரிகிறது. எல்லோரையும் மேடைக்கு அழைப்பது போல் தன்னை அழைக்கக் கூடாது என்றும் மேடையின் பின்புறத்திலிருந்து ஸ்பெஷல் எபெக்டுகளுடன் வர வேண்டும் என்று விரும்பினாராம். ஆனால் அது கடைசிவரை நிறைவேறவில்லை. தன்னை மேடைக்கு அழைத்த விவேக் உள்ளிட்ட அத்தனை பேரையும் புகழ்ந்து பேசிய ஐஸ் நிகழ்ச்சியின் மையப்புள்ளியான ரஜினி பற்றிப் பேச மறந்துவிட்டு நாலடி நகர, பின்பு போன வேகத்தில் ஓடிவந்து மூச்சிரைக்கப் பேசியது தனி அழகு. எந்திரன் படம் ரொம்ப ஸ்பெஷல். எனக்கும் இந்தப் படம் ஸ்பெஷல்தான். இந்தப் படத்துக்காக இரண்டு வருடம் கஷ்டப்பட்டு முழுமையான ஈடுபாட்டுடன் நம்பிக்கையுடன் நடித்திருக்கிறேன். படத்தை மிகவும் பிரமாண்டமான முறையில் தயாரித்திருக்கிறது சன் பிக்சர்ஸ். இந்தப் படம் இந்திய சினிமாவின் புதிய அடையாளமாக உலகம் முழுவதும் வெற்றிபெறும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அதற்காக கலாநிதி மாறனுக்கு நன்றி சொல்ல வேண்டும். எந்திரனில் பணியாற்றிய அனைத்துத் தொழில்நுட்ப கலைஞர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகள். இயக்குநர் ஷங்கரால் முடியாதது எதுவும் இல்லை என்று இந்தப் படத்தின் மூலம் நிரூபித்திருக்கிறார். படத்தின் மகத்தான வெற்றி குறித்து எனக்கு எந்த சந்தேகமும் இல்லை என்றார் ஐஸ்.


## Saturday சினிமா



சாயா சிங்குடன் நடத்த திருடா திருடிதான் தனுஷின் புகழுக்கு அசையாத உத்தரவாதம் கொடுத்த படம். அந்த சென்டிமென்டில் தொடர்ந்து சாயாசிங்குடன் தொடர்பிலிருந்த தனுஷ் சிறிது காலமாக பிரண்ஷிப்புக்கு கட்டிங் பிளேயர் போட்டுவிட்டார். அதை மறுபடியும் புதுப்பிக்கத் துடிக்கிறாராம் சாயா.



ஒரே நேரத்தில் தெலுங்கையும் தமிழையும் கையாள்கிற திறமை ஒரு சில நடிகைகளுக்குத்தான சாத்தியம். நமக்கு வரலயே இந்த சாமர்த்தியம் என்று அடி வயிற்றில் அல்லல் படும் நடிகைகளுக்கு மத்தியில் கூலாக இருக்கிறார் கார்த்திகா. ஏனென்றால் இரு மொழியிலிருக்கின்ற முக்கிய பிரமுகர்களைத் தேடிப் பிடித்து மகளுக்காகப் பேசி வருகிறாராம் அம்மா. தற்போது நடித்துக் கொண்டிருக்கும் கோ வந்தால் ஓ 'கோ' தான் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள் தாயும் மகளும்.



நான் மகான் அல்ல- கார்த்தி, காஜோல்



'மன்மதன் அம்பு' படத்தில் த்ரிஷாவின் அம்மா நடிக்கவில்லையாம். மகளுக்கு துணையா வெளிநாட்டுக்கு போயிருந்தாரு. அவ்வளவுதான் என்கிறது சினிமா வட்டாரம்.



பிந்துமாதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செப்டெம்பரில் எந்திரன்



ஆகஸ்டில் எந்திரன் திரைக்கு வரும் என ரஜினி கூறியிருந்தார். ஆனால் படம் அடுத்த மாதம் அதாவது செப்டெம்பரில்தான் திரைக்கு வருகிறது. ஜுலை 31 கோலாலம்பூரில் எந்திரன் ஆடியோ வெளியிடப்பட்டது. ரஜினி, ஷங்கர், ஐஸ்வர்யாராய், ஏ.ஆர்.ரஹ்மான் உட்பட ஏராளமானோர் விழாவில் கலந்து கொண்டனர். இந்த விழாவில் பேசிய சன் பிக்சர்ஸ் தலைமை செயல் அதிகாரி ஹன்ஸ்ராஜ் சக்சேனா, எந்திரன் அடுத்த மாதம் செப்டெம்பர் வெளியாகும் எனத் தெரிவித்தார். அநேகமாக அடுத்த மாதம் 3 ஆம் திகதி படம் திரைக்கு வரும் எனத் தெரிகிறது.

## விஜய் வழியில் அஜித்

வருஷத்துக்கு மூன்று அல்லது நான்கு என்று பட வேகப் பாய்ச்சல் காட்டிக் கொண்டிருக்கிறார் விஜய். எப்பவுமே ஒன்றை இன்னொன்றோடு ஒப்பிடுகிற மனசுதானே ரசிகனுக்கு? நம்ம தல அப்படி பாய்ச்சல் காட்ட மாட்டேங்கிறாரே என்று சுணங்கி புலம்பிக் கொண்டிருந்தார்கள் அஜீத் ரசிகர்கள். அவர்களுக்கெல்லாம் ஆறுதல் அளிக்கிற செய்திதான் இது. ஒரே வருடத்தில் மூன்று படங்களில் நடிக்க முடிவெடுத்த அஜீத் அதற்கான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டிருக்கிறாராம். அவரது முந்தைய முடிவுகளில் எந்த மாற்றமும் இல்லை என்கிறது அஜீத் வட்டாரம். முன்பு கதை கேட்டு ஒப்புக் கொண்டபடியே வெங்கட் பிரபு, கௌதம் மேனன், கிரீடம் விஜய் ஆகிய மூவரது படங்களையும் வரிசையாக நடித்துக் கொடுக்கப் போகிறாராம். இதில் வெங்கட் பிரபு, கௌதம் மேனன் படங்களை க்ளவுட் நைன் நிறுவனம் தயாரிக்கிறது. விஜய் இயக்குகிற படத்தை ஏ.ஜி.எஸ். நிறுவனம் தயாரிக்கப் போகிறது.

## தீபாவளிக்கு ஆடுகளம்



எந்திரன் வெளியாவதால் பிற படங்கள் மட்டுமல்ல சன் பிக்சர்ஸ் வெளியிடும் படங்களின் வெளியீடும் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

பொல்லாதவனுக்குப் பிறகு வெற்றிமாறன் இயக்கியிருக்கும் படம் ஆடுகளம். தனுஷ், வ.ஐ.ச.ஜெயபாலன், கிஷோர் நடித்திருக்கும் இந்தப் படம் மதுரையைப் பின்புலமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. கதிரேசன் தயாரித்த இந்தப் படத்தின் ஒட்டுமொத்த விநியோக உரிமையை சன் பிக்சர்ஸ் வாங்கியுள்ளது. ஆடுகளத்தின் படப்பிடிப்பும் போஸ்ட் புரொடக்சனும் முடிந்தாலும் எந்திரன் திரைக்கு வருவதால் பட வெளியீடு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. அநேகமாக ஆடுகளம் தீபாவளிக்கு வெளிவரலாம். தீபாவளிக்கு படம் வெளிவருவதையே வெற்றிமாறனும் விரும்புகிறார். காரணம் அவர் முதல் படம் தீபாவளிக்கு [illegible] பெற்றது.

## அஜித்துக்காக காத்திருக்க முடியாது – கௌதம் மேனன்



அஜீத்-கௌதம் மேனன் இடையே இருப்பது நட்பா, கசப்பா என்று கண்டுபிடித்துச் சொல்பவர்களுக்கு தலைக்கு லட்ச ரூபா பரிசே தரலாம். சில நேரங்களில் அஜீத் அருமையான நடிகர். அவருடன் இணைந்து படம் பண்ணுவேன் என கௌதம் மேனன் சொல்வதும், அடுத்த சில தினங்களில் அஜீத்துக்கு கதை சொல்வதே கஷ்டமான காரியம் என்று பேசுவதுமாக முரண்பட்டு நின்றார். அஜீத்தும் இனி கௌதம் மேனனுடன் சேர மாட்டேன் என்றும் இல்லையில்லை கட்டாயம் படம் பண்ணுவோம் என்றும் முன்னுக்குப் பின் முரணாகப் பேசி வந்தார். இந்த நிலையில் தயாநிதி அழகிரியின் நிறுவனத்துக்காக அஜீத்தை வைத்து கௌதம் மேனன் இயக்குகிறார். வெங்கட் பிரபு படம் முடிந்ததும் இந்தப் படம் தொடங்கும் என்று கூறப்பட்டது. இது குறித்து கௌதம் மேனனிடம் கேட்ட போது வெடித்துவிட்டார் மனிதர். ஏன் எதற்காக நான் அஜீத்துக்காகக் காத்திருக்க வேண்டும். இந்நேரம் அவர் படத்தை பாதி முடித்திருப்பேன். ஆனால் அவரோ சொன்ன திகதியில் வராமல் ரேஸுக்குப் போய்விட்டார். இப்போது நான் விண்ணைத் தாண்டி வருவாயா படத்தின் இந்தி ரீமேக்கில் பிஸியாகி விட்டேன். எனது நிறுவனம் சார்பில் 3 படங்களைத் தயாரித்து வருகிறேன். கமல் அல்லது எனது நண்பன் சூர்யாவுக்காக வேண்டுமானால் காத்திருக்கலாம். அஜீத்துக்காகவெல்லாம் காத்திருக்க முடியாது. என்னுடன் படம் செய்வதாக அறிவித்து விட்டு ஊரில் உள்ள எல்லா இயக்குநர்களிடமும் கதை கேட்டு வருகிறார். தோளுக்கு மேல் தலையிருப்பவர்களுடன் மட்டும்தான் என்னால் வொர்க் பண்ண முடியும் என்றார் கோபாவேசமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலுவிழந்தோர் எதிர்காலம்...?

வலுவிழந்தோரில் விழிப்புலனற்றோர், செவிப்புலனற்றோர், பேசும் ஆற்றல் அற்றோர் என பல தரப்பினர் காணப்படுவர். வலுவிழந்தோர் என்ற பொருளை எடுத்து நோக்குவோமேயானால் அவர்களுக்கு ஏதாவது ஒரு சிறிய குறை காணப்படும். ஆனால், அவர்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவர்கள் அல்ல.

சிலருக்கு வலுவிழந்தோர் என்பவர்களை எப்படி அணுகுவது, அவர்களுடன் எப்படி பேசுவது எனத் தெரியாது. அவர்களுடன் பேசாது அவர்களை ஒதுக்கி வைக்கிறார்கள். அவர்களை ஏதோ விநோதமானவர்கள் மாதிரி பார்ப்பார்கள். அவர்களை சமூகத்திலிருந்து ஒதுக்குகிறார்கள். அவர்களுக்குரிய உரிமைகளை வழங்க மறுக்கிறார்கள். சில பெற்றோர் அவர்களால் எதுவுமே முடியாது என்று எண்ணி வீடுகளில் முடக்கி விடுகிறார்கள். அவர்களுக்கான கல்வியினையோ தொழில் முயற்சியினையோ ஏற்படுத்திக் கொடுக்க சிலர் முன்வருவதில்லை.

முதலாவதாக விழிப்புலனற்றோரை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு ஒரு பொருளைப் பார்க்கத்தான் முடியாது. அவர்கள் பொருளைத் தொட்டு உணர முடியும். அவர்களுக்கு எத்தனையோ திறமைகள் காணப்படும். அதுமட்டுமன்றி அவர்களுக்கு ஞாபகசக்தி காணப்படும். அதுமட்டுமன்றி அவர்களுக்கு ஞாபகசக்தி அதிகம். கலையுணர்வு அதிகம். மற்றவர்கள் போன்றே சகல திறமைகளும் உண்டு. இன்று எத்தனையோ விழிப்புலனற்றோர் எத்தனையோ துறைகளில் முன்னேறி இந்நாட்டிற்கும் எம்மக்களுக்கும் பெருமை தேடித் தந்துள்ளனர்.

இலங்கையிலே விழிப்புலனற்றோர் திறமைகளை எடுத்து நோக்குவோமேயானால் அவர்களில் பலர் சிறப்பு கலைமாணி, பொதுக்கலைமாணி, முதுமாணி போன்ற பட்டதாரிகளாகவும் ஆசிரியர்களாகவும் பெருமை தேடித்தந்துள்ளனர்.

அதுமட்டுமன்றி இசைக்கலைஞர்களாகவும் விளங்குகிறார்கள். தமிழ் பேசும் முதலாவது விழிப்புலனற்ற சட்டத்தரணி எனும் பெருமையினையும் ஒருவர் தனதாக்கிக் கொண்டுள்ளார். இப்படி எத்தனையோ மாணவர்கள் இசைத்துறை கலைத்துறைகளில் சாதனைகளை நிலைநாட்டி தங்கப்பதக்கங்களைப் பெற்றுள்ளார்கள். விழிப்புலனற்ற எத்தனையோ பேர் கதிரை பின்னுகிறார்கள். விளக்குமாறு செய்கிறார்கள். தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய தமக்குத் தெரிந்த சுயதொழில்களில் ஈடுபட்டு அதில்வரும் வருமானங்களைக் கொண்டு ஏனையோர் போல் தம் சொந்தக் காலில் நிற்கிறார்கள். செவிப்புலனற்றோர், பேச்சுத்திறன் அற்றவர்கள் எத்தனையோ பேர் உயர் பதவிகளில் வகித்து வருகிறார்கள். சொந்த தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இவர்களும் மனிதர்களே. எம்போன்றவர்களே. எம்போன்ற உணர்வுகளே அவர்களுக்கும் காணப்படும். அவர்களை சமூகத்திலிருந்து ஒதுக்கிவிடாதீர்கள். அவர்களுக்கும் எம்போல் சகல உரிமைகளையும் வழங்குங்கள். அவர்களையும் மதியுங்கள்.

பெற்றோர்கள்! தங்கள் பிள்ளைகளை ஊனமுற்றவர்கள் எனக்கருதி வீடுகளில் முடக்கிவிடக்கூடாது. அவர்கள் ஊனமானவர்கள் அல்லர். சிறிய குறையுடைய விசேட தேவை உடையவர்கள். அவர்களின் மனங்களில் ஊனம் இல்லை. சாதிக்கத் துடிப்போர். அவர்களின் எதிர்காலங்களை வீணடிக்காதீர்கள். எனது பிள்ளை ஊனம். அவனால் எதுவும் முடியாது. ஏனையோர் அவனைப் பார்த்து கேலி செய்கிறார்கள் என எண்ணி பிள்ளைகளை வீட்டிலேயே முடக்கி உங்கள் பிள்ளைகளின் வாழ்வை சீரழித்துவிடாதீர்கள். அவர்களை அவர்களுக்கு ஏற்ற பாடசாலைக்கு அனுப்புங்கள். விசேட தேவையுடையோருக்காக யாழ்.மண்ணிலே வாழ்வகம் [சுன்னாகம்], சிவபூமி [கோண்டாவில்], ஆர்க் [உடுவில்] மற்றும் கைதடி நவீல்ட் பாடசாலை போன்றன இயங்கிவருகின்றன.

அவர்களுடன் உங்கள் பிள்ளைகளை இணையுங்கள். அங்கு அவர்களுக்கான கல்வி வசதிகள் செய்து கொடுக்கின்றன. அவர்களுக்கான மேலதிக கற்றல் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அவர்களின் திறமைகளை வெளிக்காட்ட கண்காட்சிகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. ஏனைய மாணவர்களுடன் உங்கள் பிள்ளைகளையும் இணையுங்கள். இதுவரை காலமும் வீணாகிவிட்டால் இனிவரும் காலத்தினை அவர்களுக்கு ஒளிமயமாக்குங்கள். அவர்களுக்கும் சமுதாயத்தில் மரியாதை செய்யுங்கள். சரியான உரிமைகளை வழங்குங்கள் அவர்களுக்குரிய உரிமைகளைப் பாதுகாருங்கள்.


நாம் அனைவரும் விசேட தேவையுடையோருக்குத் தேவையான உதவிகளை வழங்க முன்வரவேண்டும். அவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளுக்கு எம்மால் முடிந்த உதவிகளை வழங்க வேண்டும். அவர்களின் திறமைகளை இனங்கண்டு அதில் அவர்கள் முன்னேற உதவவேண்டும். விசேட தேவையுடையோர் அனைவரும் இம்மண்ணில் தலை நிமிர்ந்து ஏனையவர்போல் வாழ்வதை உறுதி செய்து அவர்களுக்கு எம்மால் முடிந்த உதவிகளை வழங்கி அவர்களையும் இச்சமுதாயத்தில் உயர்த்திடுவோம்.

சுபோதினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வார மெயிலில் இவர்...



# ஜூலியான் அசேஞ்

உலகின் மிகப்பெரிய இராணுவமான அமெரிக்க இராணுவத்தின் ஆப்கானிஸ்தான் படை நடவடிக்கைகளை அம்பலப்படுத்தியிருக்கும் விக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் நிறுவுனரே ஜூலியான் போல் அசேஞ் ஆவார்.

விக்கிலீக்ஸ் என்ற இணையத்தளமானது உலகின் இரகசிய ஆவணங்களை ஆதாரபூர்வமாக வெளியிடும் ஒரு இணையத்தளம் ஆகும்.

இந்நிலையில் தற்பொழுது விக்கிலீக்ஸ் ஆப்கான் இராணுவ விவகாரங்களையும் அமெரிக்க இராணுவ இரகசியங்களையும் பொதுமக்களின் பார்வைக்கு வெளிப்படுத்தியுள்ள நிலையில் அதற்கு காரணமானவர் ஜூலியான் போல் அசேஞ்.

அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்தின் ரௌண்வில்லேயில் 1971 ஆம் ஆண்டு பிறந்த அசேஞ்சின் பெற்றோர்கள் ரூரிங் தியேட்டர் கம்பனி ஒன்றை நடத்தியிருந்தார்கள்.

அத்துடன் அசேஞ் 37 பாடசாலைகளில் தனது பாடசாலைக் கல்வியையும் அவுஸ்திரேலியாவிலுள்ள 6 பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியையும் பயின்றிருந்தார்.

தன்னுடைய 18 ஆவது வயதில் தன் காதலியைத் திருமணம் செய்த அசேஞ்சிற்கு ஒரு மகன் உண்டு.ஆனால் கணினிக்குள் ஊடுருவிய குற்றத்திற்காக அசேஞ் அவுஸ்திரேலிய பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தியதைத் தொடர்ந்து அவரது மனைவி அவரைவிட்டு பிரிந்து சென்றதுடன் மகனையும் தன் கூடவே அழைத்துச் சென்றிருந்தார்.

தனது பாடசாலைக் காலத்திலேயே கணினித்துறையில் சிறந்து விளங்கிய அசேஞ் கணினிக்கான புரோகிராம்களை எழுதுவதிலும் வல்லவராக இருந்தார்.இதன் பயனாக பிறரது கணினிக்குள் ஊடுருவுவதை இலகுவில் பயின்றிருந்தார்.

இத்திறமை காரணமாக கணினிக்குள் ஊடுருவுவது தொடர்பான புத்தகம் ஒன்றை எழுதுவதற்கு அசேஞ் உதவியிருந்தார்.இதன் மூலம் சிறந்த ஆராய்ச்சியாளர் என்ற பெருமை அவரைச் சார்ந்தது.

பின்னர் 1991 ஆம் ஆண்டில் 'இன்ரர்நஷனல் சப்வேர்ரிவ்ஸ்' எனும் ஊடுருவல் நிறுவனத்தில் இணைந்தார்.

மெல்போர்ன் பல்கலைக்கழகத்தில் பௌதீகவியல் மற்றும் கணிதத் துறைகளில் பயின்ற காலத்தில் 2006 ஆம் ஆண்டிலேயே விக்கிலீக்ஸ் இணையத்தளத்தை உருவாக்குவதில் அசேஞ் அதிக கவனம் காட்டினார்.

இருந்தாலும் தனது விக்கிலீக்ஸின் இணையத்தளத்தை 1999 இல் leaks.org என்றே பதிவு செய்திருந்தார்.

அத்துடன் அந்த இணையத்தளத்தில் தான் எதனையும் செய்வதில்லை எனவும் அவர் மறுப்புத் தெரிவித்திருந்தார்.

இருந்தாலும் 2006 இல் விக்கிலீக்ஸ் இணையத்தளம் பூரணமாக உருவாக்கப்பட்டது.தற்பொழுது அதன் ஊடகப் பேச்சாளராகவும் பிரதம ஆசிரியராகவும் அசேஞ் பணிபுரிகின்றார்.

ஆனால் விக்கிலீக்ஸ் இணையத்தளத்தை தான் உருவாக்கிக் கொள்ளவில்லையெனக் கூறும் அசேஞ் தான் அதன் பிரதம ஆசிரியராகவே உள்ளதாகக் கூறுகின்றார்.

கென்யாவில் இடம்பெற்ற நீதிக்குப் புறம்பான படுகொலைகள் குறித்த இரகசியத் தகவல்களை வெளிக்கொணர்ந்தமைக்காக 2009 ஆம் ஆண்டின் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஊடக விருது அசேஞ்சுக்கு வழங்கப்பட்டது.

அத்துடன் 2008 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின் மேலான பொருளாதாரச் சுட்டெண் விருது உள்ளிட்ட பல விருதுகள் அசேஞ்சிற்கு வழங்கப்பட்டது.

இவ்வாறான திறமைகளைக் கொண்டுள்ள அசேஞ் இரகசியத் தகவல்களைக் கணினிக்குள் ஊடுருவித் திரட்டி வெளியிடுவதில் மேலும் மேலும் ஆர்வத்தைக் காட்டினார்.


இதன் விளைவாகவே அண்மைய ஆப்கான் யுத்தத்தில் அமெரிக்காவின் இரகசியங்கள் உள்ளிட்ட தகவல்களை விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது.

இவ்வாறாக உலக நாடுகளை ஏதோ ஒருவகையில் அச்சுறுத்தும் பாணியிலேயே அசேஞ்சின் செயற்பாடுகள் உள்ளது.

அநீதிக்குப் புறம்பான செயற்பாடுகளை அதனை மேற்கொள்பவர் யாராக இருந்தாலும் வெளிச்சத்திற்கு கொண்டுவருவது தவறான செயலென்று கூறமுடியாது.

யோ.நிமல்ராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளரும் அதிசயம்!



இங்கிலாந்து நாடு சுற்றுச்சூழலை ஆய்வு செய்ய 'மிகப்பெரிய மிதக்கும் சுற்றுச் சூழல் ஆய்வகம்' ஒன்றை அமைத்து வருகிறது. உலகின் கவனத்தை ஈர்க்கும் அந்த அதிசய ஆய்வகம் வேகமாக வளர்ந்து வருகிறது. அதைப்பற்றிய சில தகவல்கள்...

★ இது உலகின் மிகப்பெரிய தண்ணீரில் மிதக்கும் ஆய்வகமாக இருக்கும்.

★ வெறும் ஆய்வகமாக மட்டும் செயற்படாமல் பல்வேறு சிறப்புகளையும் இது பெற்றிருக்கும். அதாவது இது கீழ்த்தளம் கப்பலைப் போன்றும் மேல்தளம் கண்காட்சியும் போலவும் உருவாக்கப்படுகிறது. உச்சியில் தாவரங்கள் வளர்க்கப்படுகின்றன.

★ இது மின்சாரத்திலும் சூரிய சக்தியைப் பயன்படுத்தியும் இயங்கும் வகையில் தயாரிக்கப்படுகிறது.

★ ஐரோப்பிய ஆறுகளில் வலம் வந்தபடி நீர்நிலை, நீர்வாழ் உயிரினங்கள் பற்றிய விரிவான ஆய்வுகளை மேற்கொள்ளும்.

★ ஆற்று நீரை சுத்தமான குடிநீராக மாற்றும் பணியையும் செய்யும். அதை ஆய்வகத்தின் பல்வேறு பயன்களுக்கு உபயோகப்படுத்திக்கொள்வார்கள்.

★ ஒரே இடத்தில் நிற்காமல் உலகம் முழுவதும் வலம் வரும் இந்த நகரும் ஆய்வகம் கண்காட்சியகத்தை பொதுமக்கள் பார்வையிட நேரம் ஒதுக்கித் தரப்படும். இங்கிலாந்திடம் அனுமதி பெற்று கண்காட்சியைப் பார்வையிடலாம்.

★ ஆய்வகத்தின் சுவர் வெள்ளியால் ஆனது. அதன் மீது டைட்டானியம் டைஆக்சைடு முலாம் பூசப்பட்டிருக்கும். இது புறஊதாக் கதிர்களை ஈர்த்து ஆபத்தில்லாத வகையில் மாற்றிவிடும்.

★ பெல்ஜியம் கப்பல் கட்டுமானத் தொழில்நுட்பத்தில் இந்த ஆய்வகம் தயாராகிறது.

★ பணிகள் நிறைவு பெற்றதும் இது 'உலகின் மிகப்பெரிய மிதக்கும் ஆய்வகம்', 'மிதக்கும் தோட்டம்', 'மிதக்கும் சிறிய பூமி' என பல்வேறு சிறப்புகளைப் பெறும் என்று தொழில்நுட்ப வல்லுநர்கள் கூறினர்.


# கண்ணுக்குள் தொலைநோக்கி...


'கண்ணுக்குள் தொலைநோக்கியைப் பொருத்தினால் பார்வையற்றவர்களும் உலகைப் பார்க்கலாம்' என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

கண்ணின் பெருமை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இந்த உலகையே நம் கண்களால்தான் ரசிக்கிறோம். பல்வேறு காரணங்களால் கண் பார்வை பாதிக்கப்படுகிறது.

வயதாகும்பேது பார்வைத் திறனில் உதவும் ரெட்டினா செல்கள் மறுஉற்பத்தி ஆகாததால் முதியவர்களுக்கு பார்வைக் குறைபாடு ஏற்படும். இதை ஏ.எம்.டி.என்று குறிப்பிடுகிறார்கள். இந்த வகைப் பாதிப்பு உடையவர்களுக்கு அமெரிக்க விஞ்ஞானிகள் புதிய வழியில் பார்வை கொடுத்துள்ளனர்.

கண்ணுக்குள் தொலைநோக்கிக் கருவியைப் பொருத்திப் பார்வைத் திறனை திரும்பச் செய்ய முடியும் என்று சாதித்துக்காட்டி இருக்கிறார்கள் அமெரிக்க ஆய்வாளர்கள். அமெரிக்காவில் 30 சதவீதம் பேர் ஏ.எம்.டி.பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.





அமெரிக்காவின் எப்.டி.ஏ. என்ற மருத்தவ தேசிய அமைப்பு இது பற்றி ஆராய்ச்சி செய்த வந்தது. அவர்கள் ஐ.எம்.டி. (I.M.T.) என்னும் கண்ணுக்குள் பொருத்தும் சிறிய தொலைநோக்கியை வடிவமைத்திருக்கிறார்கள். இதை ஏ.எம்.டி. பாதிப்புக்கு உள்ளானவர்களின் கண்ணின் கார்னியா பகுதியில் பொருத்திவிடுவார்கள். இது ரெட்டினா செல்கள் செய்யும் வேலையைச் செய்வதால் அவர்கள் பார்வைத் திறனைத் திரும்பப் பெறுகிறார்கள்.

சோதனை முறையாக சிலருக்கு கண்ணுக்குள் தொலைநோக்கி பொருத்தி ஆராய்ந்ததில் வெற்றி கிடைத்துள்ளது. இதுபோன்ற சிகிச்சையை ஏ.எம்.டி.பாதிப்பு உச்சக்கட்டத்தில் இருப்பவர்களுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும். ஆரம்ப நிலை பாதிப்பில் உள்ளவர்களுக்கு இந்த சிகிச்சை உதவாது. மேலும் ஒரு கண்ணில் மட்டுமே தொலைநோக்கி பொருத்தும் சோதனையில்தான் வெற்றி கிடைத்திருக்கிறது.

'தொடர்ந்து ஆய்வுகள் நீடித்து வருகிறது. அப்போது இந்தக் குறைகளைக் களைய வழிகளைக் கண்டுபிடிப்போம்' என்று ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.




# உலகின் பழமையான எழுத்து கண்டுபிடிப்பு

உலகின் மிகப் பழைமையான எழுத்துகள் பொறித்த களிமண் துண்டு ஒன்று இஸ்ரேல் நாட்டில் ஜெருசலேம் நகரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உலகின் மிகத் தொன்மையான நகரம் இஸ்ரேலின் ஜெருசலேம். இந்நகரத்தின் கிழக்குப் பகுதியோடு இணைந்துள்ள இஸ்ரேலி என்ற இடத்தில் பழைய ஜெருசலேம் அமைந்துள்ளது. இதன் தென் பகுதியில் உள்ள கோட்டைச் சுவருக்கருகில் கி.மு.10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கோபுரம் ஒன்று உள்ளது.

இதன் அடியில் குவிந்திருந்த இடிபாடுகளை சமீபத்தில் இஸ்ரேல் நாட்டின் தொல்பொருள் ஆய்வாளர்கள் அகற்றினர். அப்போது அந்த இடிபாடுகளுக்கிடையில் ஒரு களிமண் துண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இரண்டு செ.மீ.அகலமும் 2.8 செ.மீ.உயரமும் கொண்ட இக்களிமண் துண்டில் 'நீங்கள் அவர்களை' என்று எழுதப்பட்டுள்ளது. இக்களிமண் துண்டின் காலம், கி.மு.14 ஆம் நூற்றாண்டாகக் கணிக்கப்பட்டுள்ளது.



அதாவது இன்றிலிருந்து 3,400 ஆண்டுகள் பழைமையானது இக்களிமண் துண்டு. இதேகாலகட்டத்தில் எகிப்தை ஆண்ட பாரோ வம்சத்தைச் சேர்ந்த அகினாட்டன் என்ற மன்னர் காலத்து 380 களிமண் துண்டுகள், எகிப்தின் எல் அமர்னா என்ற இடத்தில் ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ளன. அவற்றிலுள்ள எழுத்துகளும் இப்போது ஜெருசலேமில் கண்டறியப்பட்டுள்ள களிமண் துண்டில் உள்ள எழுத்துகளும் ஒத்திருக்கின்றன.

இந்தக் கண்டுபிடிப்பு மூலம் வெண்கலக் காலம் என்று வரையறுக்கப்பட்டுள்ள கி.மு.14 இலேயே ஜெருசலேம் நகரம் முக்கியத்துவத்தோடு திகழ்ந்திருக்க வேண்டும் என்று ஜெருசலேமிலுள்ள ஹீப்ரு பல்கலையின் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

# பெண்கள் புத்திசாலிகள் மட்டுமன்றி பல்திறன்மிக்கவர்கள் என்கிறது ஆய்வு

'பெண்களால் ஆண்களை ஒரு காலமும் மிஞ்சமுடியாது' என்று மார்தட்டும் ஆண்கள் உண்டு. சமீபத்திய ஆய்வில் பெண்கள் புத்தசாலி மட்டுமல்ல பல்திறன் மிக்கவர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் ஹெர்ட்போடுசைர் பல்கலைக்கழக உளவியல் அறிஞர் குழு இது தொடர்பான ஆய்வில் ஈடுபட்டது. 50 ஆண்கள் மற்றும் 50 பெண்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். ஹோட்டலில் வரவேற்பாளராக இருக்கும்போது போன் அழைப்புகளை எடுப்பது, அருகில் உள்ள மேப்பைத் தேடுவது, சிறிய கணக்கு ஒன்றைப் போடுவது, இதற்கு முன்பு என்ன செய்தோம் என்று நினைவுபடுத்துவது போன்ற ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்ய வைத்து ஆய்வு செய்தனர். அப்போது ஆண்களைவிட பெண்கள் சிறப்பாகச் செயற்பட்டனர்.

ஆண்கள் மேப்பைத் தேடும்போது; போன் அழைப்புக்கு பதில் சொல்வதில் தடுமாறினார்கள். அழைப்புக்குப் பதில் சொன்னால் மற்ற வேலைகளை மறந்துவிடுகிறார்கள். ஆனால், பெண்கள் ஒரே நேரத்தில் 4 வேலைகளைத் தடுமாற்றம் இல்லாமல் செய்வதைக் கண்டு விஞ்ஞானிகள் அசந்து போய்விட்டனர்.

ஆய்வாளர் கெய்த் லா கூறும்போது, 'பெண்கள் புத்திசாலிகள் என்று கதைகளில்தான் கேட்டிருக்கிறேன். எங்கள் ஆய்வில்தான் அதை உண்மை என்று புரிந்து கொண்டேன்' என்று வியக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Saturday மெயில் சிறுகதை

# காதலைச் சொல்லவா...?

கே.எஸ்.ஜசி, நல்லூர்

அன்று நேரத்துடன் யசி தனது தனியார் கல்வி நிலையத்துக்கு சென்றாள். அங்கே அவளது உயிர்த் தோழியாக இருந்த மது வரவில்லை. யசி நுழைவாயிலையும் வகுப்பில் தொங்கிக் கொண்டிருந்த மணிக்கூட்டையும் பார்த்தபடியே இருந்தாள். அவள் வராததை கண்ட யசி வாங்கில் வந்து இருந்தாள். அப்போது அவள் மனம் நீண்ட கால பயணத்தை தொடர்ந்தது.

யசி 2008ம் ஆண்டு புதிதாக வீட்டில் குடிபுகுந்தாள். அவள் குடிபுகுந்த வீட்டிற்கு பக்கத்து வீட்டில் வசித்தவன்தான் கதி. அவன் இவளுடன் அன்புடன் பழகிவந்தான். இவ்வாறே மாலை நேரங்களில் அவனுடன் சேர்ந்து பல விளையாட்டுகள் விளையாடுவாள். யசிக்கு விளையாட்டு என்றால் கொள்ளை பிரியம். கதிக்கு கிரிக்கற்றில் இருந்த ஆர்வத்தால் அவன் விளையாடும் முறையை தனியாக ரசிப்பாள் யசி. இவ்வாறே கல்வியிலும் ஆர்வம் செலுத்தி வந்த யசி தொடர்ந்தும் அவனுடன் பழகுவதற்கு வாய்ப்பு கிடைத்தது. யசி படிப்பதற்காக அவனிடம் பல விடயங்கள் பற்றி கலந்துரையாடுவாள். இவ்வாறே நாட்கள் நகர்ந்து சென்றது. ஆனால் யசியின் மனம் துடித்தது. அவன் பழகும் விதங்களில் மாற்றத்தை உணரத் தொடங்கினாள் யசி. அவன் அவளை காதலிப்பதை அவனுடைய செயற்பாடு மூலம் அறிந்தும் உண்மை அறியாது நட்பை பிரியக்கூடாது என்று யசி பொறுமையுடன் இருந்தாள். அத்துடன், அவனுடன் பழகும் நேரத்தை குறைத்துக் கொண்டாள். இதனால் அவளுடைய கல்வி குழம்பி விடும் என எண்ணினாள். இவ்வாறே அவள் கல்விகற்கும் நிலையத்தில் கதி வந்து சேர்ந்தான்.

நாட்கள் இவ்வாறு படிப்படியாக சென்றது. ஒருநாள் அதாவது 4.8.2009 அன்று கதி அவளிடம் வந்து "யசி ஐ லவ் யூ" என்றான். இதை சற்றும் எதிர்பாராத யசி எதுவும் செய்யமுடியாமல் நின்றாள். அப்போது கதி அவளிடம் நீ நாளை பதிலை சொல். நீ இன்று சொல்லனும் என்று இல்லை என்று கூறிவிட்டு சென்றான். யசி வீட்டிற்கு சென்று யோசித்து பார்த்தாள் அது சரியாகப்படவில்லை இதனால் அவனுக்கு "நீ நண்பனாய் பழகுவதாய் பழகு இல்லை முறித்துவிடு நட்பை" என்று எழுதி கொடுத்து விட்டாள். இதனால் அவன் மனம் மிக வேதனையடைந்தது. கல்வியிலும் ஆர்வம் குறைந்தது. அதை வாசித்து விட்டு கதி அவளிடம் வந்து யசி நீ என்னை காதலிக்கவில்லை என்கிறாய் எனக்கு புரியவில்லை. நீ என்னை என்றாவது காதலிப்பாய் என்று காத்திருப்பேன். அப்படி இல்லை என்றால் நீ யாரை பிடித்திருக்கிறது என்று சொல்கிறாயோ அவளைக்கட்டிக்கிறேன் என்று கூறிவிட்டு சென்றுவிட்டான்.

பக்கத்து வீடு என்றபடியால் அவனை தினமும் எதிர் கொள்ளவேண்டி ஏற்படும். இருந்தும் யசி அதை எல்லாம் ஒதுக்கும் வரை தவிர்த்து வந்தாள். இவ்வாறே யசியும் கதியும் நெடுநாள் பேசாது இருந்தனர். இவ்வாறே யசி காலத்தை கழித்தாள். நாட்கள் மாதங்களாகவும் மாதங்கள் வருடங்களாகவும் ஓடியது. யசி அவ்வீட்டை விட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டது. காரணம் வீட்டு சொந்தக்காரர்கள்.

அவ்வீட்டை விட்டுவிட்டு நல்லூரில் வீடு எடுத்து குடியேறினார்கள். அவள் அங்கு குடியேறிய பின் யசியின் மனம் அவனை பற்றி நினைக்கத் தொடங்கியது. இதை எவ்வாறு என்ன மாற்றமாய் கொள்வது எனத் தெரியாமல் தவித்தாள். அவனை பார்க்க வேண்டும் என்று தினம் தினம் துடித்தாள். கல்வியில் ஆர்வம் அற்று இருந்தாள். உணவைக்கூட வெறுத்தாள். உண்டால், நின்றால், தூங்கினால் கனவில் நீ என்று இருந்தாள். இதனால் அவள் தூக்கத்தை விரும்பினாள் தூக்கத்தில் கனவில் அவனை ரசித்தாள். இதனால் தான் கல்விகற்ற தனியார் கல்வி நிலையத்தில் மீண்டும் போய் சேர்ந்தாள் தன் தோழி மதுவிடம் இதுபற்றிக் கூறவே அவள் சிரித்தாள். அவளிடம் ஏய் மது என்னனென்று சொல்லவதடி என்று கேட்டாள். மது கடிதத்தில் எழுதிக்கொடு என்றாள். அவளும் எழுதி எழுதி பார்த்தேன் எதுவும் சரிவரவில்லை. இறுதியில் முடிவெடுத்தாள் அம்முடிவு தன் காதலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்று யசி யோசிக்கவில்லை. அதுதான் தன் தோழியிடம் கூறிவிடுவதாக அவ்வாறே மதுவிடம் அன்று சொல்லிவிடுவதற்காகத் தான் நேரத்துடன் தனியார் கல்வி நிலையத்துக்கு நேரத்துடன் வந்திருந்தாள் யசி.

வகுப்பறை மணிக்கூடு அலாரம் ஒலி கேட்டு திரும்பிய யசி மது வந்திருபபதை அவதானித்தாள். அவளிடம் ஏய் மது நான் கதியை லவ் பண்ணுகிறேன் என்று சொல்லன் என்னால அதை அவன் முன்னால சொல்ல முடியாது ப்ளீஸ் ஹெல்ப் மது என்றாள். அவள் சரி சொல்கிறேன் என்றாள். அன்று யசியின் காதலுக்கு சம்மதம் கல்வி நிலையத்தில் என்றது போன்று ஆசிரியர் வரவில்லை கதியிடம் மதி சொன்னாள் அவன் என்ன கதைப்பாள் என்று பார்க்காது மறுபக்கம் திரும்பி நின்றாள் யசி. மது கதியிடம் நீ சொன்னதெல்லாம் சொல்லிவிட்டேன் என்றாள். இதை நம்பினாள். ஆனால் தினமும் கல்வி நிலையத்துக்கு வந்தாள் யசி. ஆனால் கதி அவளுடன் கதைக்கவில்லை இவரும் கதைக்கவில்லை. அவன் முதல் கதைக்கட்டும் என்று யசியும் இருந்தாள் இவ்வாறே கல்வி நிலையத்தில் உயர்தர கல்வியை முடித்துவிட்டு அதன் பின் யசி அவ்விடத்திற்கே வருவது இல்லை. ஆனால் மது மூலம் அவனை பற்றி அறிந்தாள். அவனுடைய படம் அவன் யசியிடம் கொடுக்க சொன்னதாக கொண்டு வந்து கொடுத்தாள். இவ்வாறே எப்போதாவது ஒருநாள் மதுமூலம் அறிந்தாள் யசி.

அடுத்த ஆண்டு வந்தது. யசி விளையாட்டுப் போட்டி ஒன்றுக்காக யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்துக்குச் சென்றாள். அங்கே கதியும் நின்றிருந்தான். யசி அவனுடன் கதைக்க வேண்டும் என்று அவனை கதி என்றழைத்தாள். கதி திரும்பிப் பார்த்து அவள் கதைக்க முன் யசி நீ சொன்ன படியே நான் மதுவை லவ் பண்ணுகிறேன். நான் விரும்பினேன் உன்னை. நீ கிடைக்கவில்லை. நான் அன்று சொன்னது போலவே நீயும் மதுவும் அன்று ரியூசனின் நீ போய் சொல்லு நீ போய்சொல்லு என்று சண்டை பிடித்துக் கொண்டிருந்தீர்களே. அதில் இருந்தே முடிவு எடுத்தேன் நீ சொல்வது மதுவை லவ் பண்ணு என்று. பிறகு மது வந்து நீ திரும்பி நிற்கும் போது வந்து சொன்னால் கதி ஐ லவ் யூ என்று. நானும் உடன் அவளிடம் நானும் லவ் பண்ணுகிறதாக சொல்லி விட்டேன் சந்தோசமா யசி என்றான்.

யசியால் எதுவும் பேசமுடியவில்லை. கண்ணில் இருந்து நீர் ஆறாய் பெருகியது. ஒருவாராக சமாளித்துக் கொண்டு கதி மதுவை எப்ப நீ சந்திப்பாய் என்றேன். தினமும் போனில் கதைப்பேன். ஏதும் சொல்லனுமா? என்றான் யசி. இல்லை என்றாள் வாயால்.பின் அவனிடம் இருந்து விடைபெற்றுவிட்டு அழுகை முட்டிய மனதுடன் உடைந்த உள்ளத்தை தாங்கியவாறு தன்னுள் உயிர்த் தோழியாகக் கலந்திருந்த மதுவிடம் தன்னுள்ளே மது நீ என் உண்மையான தோழியா? ஏன் இப்படித் துரோகம் செய்துவிட்டாயே. என் காதல் சொல்லச் சென்று உன்காதல் சொன்னாயே ஏன் காதலிப்பது பிடிக்கவில்லையா? ஏன் நான் மது இப்படித் துரோகம், மது இனி என் கதி இல்லை. கதி உன்னிடமா? இன்னொருவருடைய காதலனிடமா நீ உன் காதலைச் சொன்னாய்? ஏன் மது ஏன். என்று கேள்வி மேல் கேள்விகளை அடுக்கியபடி விளையாட்டை முடித்துக் கொண்டு வீடு திரும்பினாள் யசி.

வீட்டில் மது. அவள் மனம் மதுவைக் கண்டதும் மது எப்பவந்தாய். வா அறைக்குள் என்று தன் அறைக்குள் அழைத்துச் சென்றாள்.

மதுவிடம் எதுவும் பேசாமல் யசி கையில் இருந்த மணிக்கூட்டு முள் சுற்றுவதை பார்த்தபடியே நின்றாள். மது யசியிடம் யசி ஏதும்பிரச்சினையா யசி என்றாள். யசி மதுவிடம் ஏன் மது. இப்படி நான் நினைப்பது எல்லாம் சிறிய சந்தர்ப்பத்தால் தவறிச் செல்கிறது. மது என் காதலும் அப்படித்தான். மது கதியிடம் சொன்னது என் காதலா? இல்லை உன் காதலா? சொல் மது சொல். ஏன் இப்படி மது. அவன் என்னை காதலிக்கும்போது நான காதலை எதிர்த்தேன். நான் காலிக்கும்பொழுது நீ என்னை தவிக்க விட்டுவிட்டாயே? ஏன் மது இப்படித் துரோகம் செய்தாய். நான் அவனை உயிராக நேசிக்கிறேன் மது. அது தெரிந்துமா மது இப்படி ஏன் மது என்று அழுதாள்.



மது எதுவும் பேசாமல் நின்றாள். யசி மதுவிடம் வாழ்த்துகள், என் மனம் இங்கில்லை. மது நட்பும் இல்லை. காதலும் இல்லை. என் காதலை சொல்லச் சென்றேன். அதற்குள் முந்தியபடியால் மது நீ அவனைக் காதலி அவனுடன் சந்தோசமாக இரு மது. ஆனால், அவனுக்கு துரோகம் செய்துவிடாதே மது (Bye) உடனக்கும் எம் நட்பிற்கும் OK மது.

மது எவ்வித உணர்ச்சியும் இன்றி நிற்பதை யசி கண்டாள். அவளால் முடியவில்லை. மது எப்படியடி உன்னுடன் பழகினேன். ஏன்டி ஏன்டி இப்படி துரோகம் பண்ணினாய் என்று இவள் கேட்கும்போதே மது அவள் வீட்டை விட்டு வெளியேறினாள். அவள் மனதில் அன்றே எதிரியாய் குடிபுகுந்தாள் மது. மதுவை வாழ்த்தவா? இல்லை அவளிடம் காதலைச் சொல்லவா என்று தெரியாமல் கனவில் சொல்லிப் பார்த்தால் யசி ஐ லவ்யூ கதி பின் அவனிடம் சொல்லாமல் தன் நண்பியாய் இருந்த மதுவாவது தனக்கு கிடைக்காத அவனுடன் சந்தோசமாய் வாழட்டும் என்று நினைத்தபடி தன் புதிய நாளை அன்றிலிருந்து தொடர்ந்தாள் யசி.

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
Saturday மெயில் சிறுகதை
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## எனக்கொரு அண்ணன்

சீராட்டும் தந்தையாய்
தாலாட்டும் தாயாய்
குடும்பத்திற்கு நிழலாய்
எனக்கொரு அண்ணன்

பதினாறு வயதினிலே
வறுமையை கொலை செய்து
குடும்பத்தை வாழவைக்க
படிப்பினை இடைநிறுத்தி
பயணித்தான் வெளிநாடு

காலங்கள் ஓட- நம்
கஷ்டங்கள் ஒழிந்தன
காகிதத் தாள்கள் முழுதும்-என்
அண்ணனின் வியர்வை
எழுத்துகளாக பதியப்பட்டன
என் குடும்பத்தில் ஒவ்வொருவரது
சந்தோஷமும்-என்
அண்ணன் அரபு நாட்டில்
சூட்டையும் குளிரையும்
சுதாகரித்த நிலையைச் சொல்லியது

ஒவ்வொரு வீட்டிலும்
எந்தனை அண்ணன்மார்-தங்கைக்கு
எனக்கொரு அண்ணனாய்?
பூரித்து நின்றேன்-என்
அன்பான அண்ணனைப் பார்த்து
வாழ்வு தந்த வள்ளல் அவன்
காலம் முழுதும் நன்றிக்குரியவன்

**ர.கீதா, சுன்னாகம்.**

## நாகரிகம்

விஞ்ஞானம் என்று
விபசாரம் நடத்துகிறது
நாகரீகம்
விளையாட்டுக்காய்
காதல் நாடகம்
அரங்கேற்றுகிறது!

தாயைக் கூட
தாரமாய் நினைக்குது
தாகம் வந்தாலும்
காமம் என்குது!
கை பேசியில்
கலர் படம் பார்க்கிறது...
கட்டில் சமாசாரத்தை
கடை கடையாய்
காசுக்கு விற்க்குது!

சின்ன வயசிலே
சிகரெட் பிடிக்குது!
சீறும் புலி கூட
சில நேரம்
எலியாய் மாறுது
எல்லாம் நாகரிகத்திற்கு
பலியிடப் போகுதோ!

**ந.ஜனார்த்தன்,**
**ஹொப்டன்.**

## கவிதை

*மறக்க முடியாத*
*நினைவுகளை*
*எழுதி வைக்கும்*
*சில வரிகள்*

**சுபா,**
**மானிப்பாய்.**

## கிரிக்கெட்டில் ஓர் முடிசூடா மன்னன்

சுழல் பந்து வீச்சு
முரளிதரன் வாழ்வில்
இது தந்தது
மிகப்பெரும் எழுச்சி!
தொட முடியாத சிகரங்களை
தொட்ட முதல் வீரன்
மட்டுமா எங்கள் முரளி?
கிரிக்கெட் உலகினில்
கொடி கட்டிப் பறந்த
முதல் தமிழனும் கூட...!

தூஸ்ரா சர்ச்சையை
துணிவுடன் எதிர்கொண்டு
சோதனைக் களங்களை
சாதனைக் களங்களாக
மாற்றிக் காட்டியவன்!
சர்வதேச அளவில்
தனது அணியை
தலை நிமிரவைக்க
ஊன்று கோலாய் அமைந்த
முரளியின் உலக சாதனையை
முறியடிக்க இனி
எவரால் முடியும்?

சதத்திற்கு ஒரு சச்சின்
அதிரடிக்கு ஒரு ஷெவார்க் என்றால்
சுழல் பந்து வீச்சுக்கு உலகில்
ஒரேயொரு முரளி மட்டும் தான்!
எங்கு பழகிக் கொண்டாயோ
இப்படியொரு வித்தையை?
எறிந்தால் போதும் ஒரே நாளில்
பல விக்கெட்டுகள் காலி!
எண்ணூறு விக்கெட்டுகள் என்ற
உனது இமாலய சாதனை
எங்கள் நாட்டுக்குக் கிடைத்த
மிகப்பெரிய உலக அங்கீகாரம்

ஓய்வு பெறும் உன் அறிவிப்பு
உனது இரசிகர்களிடையே -இதனால்
நீடிக்கின்றது ஒருவித பரபரப்பு
கிரிக்கெட் உலகினில்
தலைசிறந்த உன் பந்து வீச்சை
மீண்டும் காண எம் கண்கள்
நீண்ட தவமிருக்கின்றன...
தடைகளைத் தகர்த்து
தனக்கென தனி முத்திரை பதித்த
முரளியே கிரிக்கெட் சாம்ராஜ்யத்தில்
நீதானென்றும் முடிசூடா மன்னன்!

கடலலைகள் ஓய்ந்தாலும்
உனது சாதனைப் பயணம்
ஓயாது தொடர கோடான கோடி
உனது இரசிகர்கள் சார்பாக
எனது மனமார்ந்த வாழ்த்துகள்
உனக்குப் பல கோடி...

**செல்வநாயகம் ரவிசாந்,**
**(குறிஞ்சிக்கவி)**
**வீரமனை, குப்பிளான்.**

## புண்ணியம் பூத்திருக்கும்

விமர்சனங்களினால்
அன்று
காயமுற்ற
கலைப் படைப்பும்...

அவசரங்களை
விழுங்கும் தாமதத்தின்
நச்சரிப்புகளும்...

உயிரின் அறுவடைக்கு
முழுப் பங்காற்றிய
போர் எச்சங்களும்...

வெடி குண்டுகளை
இன்னும்
தன் கருவறைக்குள்
பதுக்கிடும் ஈழ மண்ணும்

சுபீட்சம் விரித்த வலையில்
சிக்கிடாத சுதந்திரத்திற்கு
அன்று
அபிப்பிராய முட்கள்
குறைவும்...

பிரணவாயு காலத்தில்
அவதரித்த
பிள்ளையின் கல்விக்கு
பரீட்சையின்மையும்...

அன்று ரணமெனும்
தலையணையில்
கண்ணயர்ந்த தாய் தீவிதின்
கருணையின் தீர்ப்பில்
கால் எட்டும் தூரமெல்லாம்...
இனி புண்ணியம் பூத்திருக்கும்!

**யாசீன்பாவா ஹுஸைன்,**
**பொத்துவில்.**

## தவிப்பு

*உறவுகள் பந்தம் என்னை*
*உறுத்தவே செய்தது*
*கண்டவை நிஜவுலகில்*
*கசப்பான காட்சிகளே*
*இதுவரை யாரும் என்னை*
*புரியவில்லை*
*எதுவரை இந்த சோகம்*
*நீளும்*
*தெரியவில்லை*

**ர.கீதா,**
**சுன்னாகம்.**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில் வரவேண்டுமானால்
Saturday மெயில்
இல. 68, எலி ஹவுஸ் வீதி,
கொழும்பு-15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேக் இல்லாமல் பிறந்தநாள் கொண்டாடிய ஒபாமா

49 ஆவது வயதில் காலடி வைத்திருக்கும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கடந்த வியாழக்கிழமை தனது பிறந்த தினத்தை மனைவி, பிள்ளைகளுடன் கொண்டாடவில்லை. அத்துடன், கேக் வெட்டவுமில்லை.

அன்றைய தினம் வாஷிங்டனில் தெரிவித்தார்.

கேக் இல்லை என்பது தனக்கு பெரும் ஏமாற்றத்தைத் தருவ




அமெரிக்க தொழில் சம்மேளனத்தில் (படத்தில்) உரையாற்றிய ஒபாமா தனது பாதுகாப்பு செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருக்கும் புலனாய்வுப் பிரிவினரின் ஆலோசனையின் பேரிலேயே பிறந்த நாள் கேக்கை வெட்டி கொண்டாடுவதைத் தவிர்த்ததாகத் தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்க தொழில் சம்மேளனத்தின் தலைவர் றிச்சர்ட் ட்ரும்கா ஜனாதிபதிக்கு பிறந்த நாள் வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன் சம்மேளனத்தின் சட்டத்தில்கேக் ஒன்றை வெட்ட [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக ஒபாமா தொழிற்சங்கங்களின் தலைவர்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்ட அந்தக் கூட்டத்தில் தெரிவித்தார்.

24 மணிநேரமும் தனக்கு பாதுகாப்பு அளிக்கும் புலனாய்வு அதிகாரிகள் கேக்கைச் சாப்பிட்டுவிட்டார்கள் என்று ஒபாமா நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்.

ஒபாமாவின் மனைவி மிச்சேலும் இளைய புதல்வியான சஷாவும் ஸ்பெயினில் விடுமுறையைக் கொண்டாடுவதற்குச் சென்றிருக்கிறார்கள். மூத்த மகள் மலியா கோடைகால முகாம்களுக்குச் சென்றிருக்கிறார். அதனால் ஒபாமாவின் பிறந்தநாள் மிகவும் அமைதியாக எளிமையான முறையில் கொண்டாடப்பட்டது.

ஒபாமாவின் மனைவி 70 புலனாய்வு அதிகாரிகள் சகிதம் இளைய மகளுடன் அமெரிக்க விமானப் [illegible] இரண்டாவதுவிமானத்தில் வாஷிங்டனில் இருந்து ஸ்பெயினின் மார்பெலா நகருக்கு பறந்து சென்றார்.

அமெரிக்க முதற் பெண்மணிக்கு அளிக்கப்படும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் வரவேற்பு தொடர்பில் ஸ்பெயினில் அதிருப்திகள் வெளிக்காட்டப்பட்டிருந்தன. மார்பெலா நகரில் மிச்சேலின் வருகையின் போது வீதிகளில் பொதுப் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. மிச்சேலோ அல்லது இளைய மகளோ நீந்துவதற்கு விரும்பக்கூடும் என்பதால் உள்ளூர் கடற்கரை பொதுமக்களின் பாவனைக்குத் தடை செய்யப்பட்டிருக்கிறது.

ஒபாமா குடும்பமே உங்களை வரவேற்கிறோம். மார்பெலா நகரைத் தெரிவு செய்ததற்கு நன்றி என்று அந்த நகரில் பிரமாண்டமான பதாகை ஒன்று தொங்கவிடப்பட்டிருந்தது. மிகவும் பெரிதாக இருப்பதால் நகரவாசிகளுக்கு அசௌகரியம் ஏற்படுவதாகச் செய்யப்பட்ட முறைப்பாடுகளையடுத்து அந்தப் பதாகை நகர அதிகாரிகளினால் அகற்றப்பட்டது.

## மூன்று வயோதிபர்கள்




மூன்று வயோதிபர்கள் தங்களது பேரப்பிள்ளைகள் 50 வருடங்கள் கழித்து தங்களைப் பற்றி என்ன பேசிக் கொள்வார்கள் என்பதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தார்கள்.

ஒருவர் சொன்னார் - 'தொழிலில் பெரும் வெற்றி கொண்டவர் என்று எனது பேரப்பிள்ளைகள் என்னைப் பற்றிப் பேசுவதையே நர்ன் விரும்புகிறேன்'.

அடுத்தவர் 'நான் ஒரு வித்தியாசமான குடும்பஸ்தர் என்று என்னைப் பற்றிப் பேரப்பிள்ளைகள் பேசுவதையே விரும்புகிறேன்' என்றார்.

மூன்றாமவர் 'எனது வயதுடன் ஒப்பிடும்போது எனது தோற்றம் நன்றாக இருக்கிறது என்று பேரப்பிள்ளைகள் சொல்வதையே நான் விரும்புகிறேன்' என்றார்.

## திருமணமும் சிறைவாசமும்



ஒரு தம்பதியர் தங்களது திருமணத்தின் 50 வருட நிறைவைக் கொண்டாடுவதற்காக ஹோட்டலொன்றில் இரவு விருந்துக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

கணவரின் கன்னங்களில் வடிந்த கண்ணீரைக் கண்ட மனைவி 'இன்றைய தினத்தில் எதற்காக அழுகிறீர்கள். இன்று எமக்கு மகிழ்ச்சியான தினம் அல்லவா? நீங்கள் உணர்ச்சிவசப்பட்டுவிட்டீர்களா?' என்று கேட்டார்.

'நான் உணர்ச்சிவசப்படவில்லை. உன்னைத் திருமணம் செய்வதற்கு முன்னரான தருணங்களை நினைத்துப் பார்க்கிறேன்' என்று கணவரிடமிருந்து பதில் வந்தது.

'கண்ணீர் சிந்துகிற அளவுக்கு 50 வருடங்களுக்கு முன்னரான அந்தத் தருணங்களுக்கு என்ன முக்கியத்துவம் இருக்கிறது' என்று மனைவி கேட்டார்.

'உன்னைத் திருமணம் செய்யாவிட்டால் என்னை 50 வருடங்கள் சிறைக்கு அனுப்பிவிடப்போவதாக உனது அப்பா என்னை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தினார் அல்லவா? உன்னை நான் திருமணம் செய்யாதிருந்தால் நாளைய தினம் நான் 50 வருடச் சிறைவாசத்தை முடித்துக் கொண்டு சுதந்திரமான மனிதனாக வெளியே வருவேன் அல்லவா?' என்று விளக்கம் தந்தார் கணவர்.

# அனைவரும் விரும்பும் வீரர்

ஆக்ரோஷம், குறுகுறு பார்வை, குழந்தைச் சிரிப்பு...கிரிக்கெட் மைதானத்தில் களமிறங்கிவிட்டால் முத்தையா முரளிதரன் என்கிற கறுப்பு மின்னல் அடிக்கடி வெளிப்படுத்தும் உணர்வுகள் இவைதான்.

கிரிக்கெட்டைப் பொறுத்தவரை இலங்கை அணி எப்போதுமே ஓர் ஆச்சரியத்துக்குரிய அணி. அதுபோலவே அணி வீரர் முரளிதரனும். இலங்கை அணிக்கு முரளிதரன் ஒரு துருப்புச்சீட்டு. எதிரணியை குறிப்பிட்ட ஓட்டங்களில் கட்டுப்படுத்த வேண்டுமென்றாலோ, குறிப்பிட்ட ஒரு விக்கெட்டை வீழ்த்த வேண்டுமென்றாலோ அந்த நேரத்தில் முரளிதரன் பந்துவீச வருவார்.



கண்டியில் பிறந்த முரளிதரன், அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 1992 இல் டெஸ்ட் போட்டியில் அறிமுகமானார். சுமார் 18 ஆண்டு கிரிக்கெட் வாழ்க்கையில் 133 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 800 விக்கெட்டுகளை வீழ்த்தி இப்போது இமாலயச் சாதனை படைத்துள்ளார். இதில் 67 முறை ஒரே போட்டியில் 5 விக்கெட்டுகளையும், 22 முறை 10 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒருநாள் போட்டிகளிலும் அதிக விக்கெட்டை வீழ்த்தி முதலிடத்தில் இருப்பது முரளிதரனே. இந்திய அணிக்கு எதிராக 1993 இல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியைத் தொடங்கிய முரளிதரன் மொத்தம் 337 போட்டிகளில் 515 விக்கெட்டுகளைச் சாய்த்துள்ளார்.

டெஸ்ட் போட்டி விக்கெட் வேட்டையில் அவுஸ்திரேலியாவின் ஷேன் வோர்னுக்கும் முரளிதரனுக்கும் இடையேதான் கடும் போட்டி நிலவியது. 2007 டிசம்பரிலேயே வோர்னை முரளிதரன் முந்திவிட்டாலும், தோள் மூட்டுக் காயம் காரணமாக சிறிது காலம் தொடர்ச்சியாக விளையாடாமலிருந்ததால் வோர்ன் முந்தினார். பின்னர் இருவரும் போட்டி போட்டு மாறி மாறி முதலிடம் பெற்றனர்.

708 விக்கெட்டுகளோடு வோர்ன் ஓய்வு பெற்றதையடுத்து முரளிதரன் இப்போது 800 விக்கெட் என்ற எட்ட முடியாத இடத்தை எட்டிப் பிடித்துள்ளார்.

ஏராளமான சாதனைகளுக்குச் சொந்தக்காரரான முரளிதரனுக்கு கிரிக்கெட்டின் பைபிளாக போற்றப்படும் விஸ்டன் இதழ் தலைசிறந்த டெஸ்ட் பந்துவீச்சாளருக்கான விருது வழங்கி கௌரவித்துள்ளது.

முரளிதரனின் கிரிக்கெட் வாழ்க்கையில் ஏற்றம் மட்டுமன்றி இறக்கமும் உண்டு. இவரது பந்து வீச்சு முறை பலமுறை நடுவர்களால் சர்ச்சைக்குரியதாக்கப்பட்டுள்ளது. பின்னர் ஆய்வுகளின் முடிவில் அந்தச் சந்தேகங்கள் தீர்ந்து முரளிதரனின் பந்துவீச்சு முறையை சர்வதேச கிரிக்கெட் சபை அங்கீகரித்துள்ளது.

18 ஆண்டு காலம் அனைத்து கப்டன்களும் விரும்பிய ஒரு வீரராக வலம் வருவது முரளிதரனின் திறமைக்குக் கிடைத்த அங்கீகாரம். முரளிதரனின் பந்து வீச்சு சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால், மைதானத்தில் கண்ணியமான நடத்தை, எதிரணி வீரர்களுடன் நல்லுறவு, பெருந்தன்மை என முரளிதரன் அனைவரும் விரும்பும் வீரர்.

மணிக்கட்டையும், விரல்களையும் ஒருசேர சுழற்றி முரளிதரன் வீசும் 'தூஸ்ரா' பந்து வீச்சு எதிரணி வீரர்களை கதிகலங்கச் செய்யும். துடுப்பாட்ட வீரர்களும், வேகப்பந்து வீச்சாளர்களும் ஆதிக்கம் செலுத்திய கிரிக்கெட்டை தனது சுழல் ஜாலத்தால் ஆக்கிரமித்தவர் முரளிதரன். வோர்னுக்கும் இதில் முக்கிய பங்கு உண்டு. வோர்ன் ஒரு ஓவரில் நான்கு பந்துகளை ஒரே மாதிரி வீசுகிறார் என்றால் ஐந்தாவது பந்தில் விக்கெட்டை குறிவைக்கிறார் என்று அர்த்தம்.

ஆனால், முரளிதரனின் கையிலிருந்து வரும் ஒவ்வொரு பந்தும் எந்தத் திசையில் திரும்பும் என்பது எந்தவொரு வீரருக்கும் தெரியாது. சச்சின், லாரா போன்ற கிரிக்கெட் ஜாம்பவான்களை முரளிதரன் தனது பந்துவீச்சால் திணறடித்ததுண்டு. ஆனால், அவர்கள் போன்ற தலைசிறந்த வீரர்களுக்குப் பந்துவீசியதைப் பெருமையாகக் கருதுகிறார் முரளிதரன்.

முரளிதரனின் 800 விக்கெட் சாதனையை மற்றொரு வீரர் முறியடிப்பது மிகச் சவாலானது. ஏனெனில் முரளிதரனுக்கு அடுத்தபடியாக உள்ள வோர்ன் 708 விக்கெட்தான் வீழ்த்தியுள்ளார். ஆனால், தனது சாதனையை முறியடிக்க இந்திய வீரர் ஹர்பஜனால் முடியுமென முரளிதரன் கணித்திருக்கிறார். அது சாத்தியப்படுமா என்பது பெரும் கேள்வியாகும்.



விளையாட்டு

## ❖ சூப்பர் ❖ சிக்ஸர் ❖


'ருவென்ரி-20' போட்டிகளில் சிக்ஸருக்குப் பஞ்சமில்லை. வீரர்கள் தங்கள் அபார ஆட்டத்தால் சிக்ஸர் மழை பொழிகின்றனர். 'ருவென்ரி-20' அரங்கில் அதிக சிக்ஸர் அடித்த வீரர்கள் வரிசையில் நியூஸிலாந்தின் பிரண்டன் மெக்கலம் முதலிடத்திலுள்ளார். இவர் இதுவரை 40 போட்டிகளில் விளையாடி 1100 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதில் 39 சிக்ஸர் அடங்கும். இவரைத் தொடர்ந்து இந்தியாவின் யுவராஜ் சிங் (38 சிக்ஸர்), மேற்கிந்தியாவின் கிறிஸ் கெய்ல் (34 சிக்ஸர்), அவுஸ்திரேலியாவின் கமரோன் வைற் (31 சிக்ஸர்), டேவிட் வார்னர் (31 சிக்ஸர்)

'ருவென்ரி-20' போட்டியில் ஒரு இனிங்ஸில் அதிக சிக்ஸர் அடித்த வீரர்கள் வரிசையில் மேற்கிந்தியாவின் கிறிஸ்கெய்ல் உள்ளார். இவர் 2007 இல் தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் அதிகபட்சமாக 10 சிக்ஸர் விளாசினார். இவரையடுத்து தென்னாபிரிக்காவின் போஸ்மேன் (9 சிக்ஸர்) பிரண்டன் மெக்கலம் (8 சிக்ஸர்), இந்தியாவின் யுவராஜ் சிங் (7 சிக்ஸர்), அவுஸ்திரேலியாவின் டேவிட் வார்னர் (7 சிக்ஸர்) ஆகியோர் உள்ளனர்.

'ருவென்ரி-20' அரங்கில் அதிக பவுண்டரி அடித்த வீரர்கள் வரிசையில் நியூஸிலாந்தின் பிரண்டன் மெக்கலம் உள்ளார். இவர் அதிகபட்சமாக 112 பவுண்டரி அடித்துள்ளார். இவரைத் தொடர்ந்து இந்தியாவின் யுவராஜ் சிங் (99 பவுண்டரி), இங்கிலாந்தின் கெவின் பீற்றர்சன் (90 பவுண்டரி), இலங்கையின் டில்ஷான் (86 பவுண்டரி), மஹேல ஜெயவர்தனா (78 பவுண்டரி) ஆகியோர் உள்ளனர்.







'ருவென்ரி-20' போட்டியில் ஒரு இனிங்ஸில் அதிக பவுண்டரி அடித்த வீரர்கள் வரிசையில் தென்னாபிரிக்காவின் கிப்ஸ் உள்ளார். இவர் 2007 இல் மேற்கிந்தியாவுக்கு எதிரான போட்டியில் அதிகபட்சமாக 14 பவுண்டரி அடித்தார். இவரைத் தொடர்ந்து அவுஸ்திரேலியாவின் ரிக்கி பொண்டிங் (13 பவுண்டரி), நியூஸிலாந்தின் ரெட் மண்ட் (13 பவுண்டரி) ஆகியோர் உள்ளனர்.

வீரர்கள் தொடர்ந்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்தும் பட்சத்தில் 'ருவென்ரி-20' அரங்கில் சிக்ஸர், பவுண்டரிகளின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகமாக வாய்ப்புள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DELHI 2010
XIX COMMONWEALTH GAMES
COME OUT AND PLAY

# ஊழலுக்கென்றே ஒரு போட்டி

இப்போதெல்லாம் 'டிரெட்மில்'லில் உடற்பயிற்சி செய்வதுதான் வழக்கம். நல்ல விலை உயர்ந்த 'டிரெட்மில்'லின் விலை இன்றைய சந்தை நிலைவரப்படி இந்திய ரூபாவில் 7 இலட்சம். ஆனால், 9.75 இலட்சம் ரூபா கொடுத்து 'டிரெட்மில்' வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

நாம் உட்காரும் நாற்காலி அது எவ்வளவு விலை உயர்ந்ததாக இருந்தாலும் என்ன பெரிய விலை, 2000 ரூபா இருக்குமா? ஆனால், ஒரு நாற்காலியின் விலை 8000 ரூபாவுக்கும் மேல். 165 லீற்றர் குளிர்ச்சாதனப் பெட்டி எவ்வளவு இருக்கும் மிஞ்சிப்போனால் 8000 ரூபா இருக்குமா? ஆனால், அதுவே வாடகைக்கு 42,000 ரூபா என்றால் எப்படி இருக்கும்?

இதெல்லாம் வடிவேலு நடித்த 23 ஆம் புலிகேசி படத்தின் இரண்டாம் பாகத்தில் வரும் நகைச்சுவைப் பகுதிகள் அல்ல. இதுதான், கொமன்வெல்த் ஊழல், கொமன்வெல்த் விளையாட்டு மோசடி.

கொமன்வெல்த் என்பதில் 'வெல்த் எப்போதும் 'கொமன்' கிடையாது என்ற கேலிச் சொற்றொடர் உண்டு. ஆனால், இந்திய மக்களின் வரிப் பணத்தில் கோடிக்கணக்கில் செலவிடப்பட்டு இந்தியாவின் மரியாதையைக் காப்பாற்றுவதாகக் கூறிக்கொண்டு கோடிக் கணக்கில் ஊழலும் மோசடியும் செய்து கொமன்வெல்த்தை தனிவெல்த்தாக மாற்றியிருக்கிறார்கள்.

ஐ.பி.எல். கிரிக்கெட்டா அதிலும் ஊழல், ஹொக்கி இந்தியாவா அதிலும் ஊழல், கால்பந்து, தடகளம், கில்லி தாண்டு, கோலிகுண்டு, பம்பரம் என்று எதனை இவர்கள் 'மேம்படுத்த' விரும்பினாலும் அது தங்களது சொத்து மேம்பாட்டிற்குத்தான் என்பதாகவே புரிந்து கொள்ளவேண்டும்.

பெருமையுடன் செய்தியாளர்கள், முக்கிய பிரமுகர்களை அழைத்துக்காட்டிய புதிய 'மேம்படுத்தப்பட்ட' நேரு விளையாட்டரங்கில் உள்ள பளுதூக்கும் விளையாட்டரங்கத்தின் மேற்கூரை பல்லிளித்து விட்டது. மேற்கூரையிலிருந்து மழைநீர் ஒழுகி மைதானத்தை நீர்மயமாக்கியுள்ளது இந்த கொமன்வெல்த் விளையாட்டு ஒப்பந்தங்களில் நிகழ்ந்துள்ள கோடிக் கணக்கான சுருட்டலுக்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.

இன்னும் நோண்டினால் நிறைய வெளிவரும். இதனால்தான் முன்னாள் அமைச்சர் மணிசங்கர் ஐயர், இந்த விளையாட்டுப் போட்டிகள் தோல்வியடைந்தால் நல்லது என்றும் இது பற்றி தான் பின்னால் கூறுகிறேன் என்றும் கூறினார். ஆனால், பின்னால் ஒன்றும் கூறத்தேவையில்லை. இப்போது வெளிவரும் தகவல்களே போதுமானதாக உள்ளது. இந்த ஊழல்களின் ஆழத்தைப் புரிந்துகொள்ள.

வீரர்கள் உடற்பயிற்சி செய்வதற்காக 'டிரெட்மில்' வாங்குவதில் ஊழல் என்று செய்தி ஊடகங்கள் இப்போது தெரிவித்துள்ளன. அதாவது 'டிரெட்மில்' இயந்திரத்தை வாங்க் 9.75 இலட்சம் ரூபா கொடுத்ததாகவும் ஆனால், நல்ல விலை உயர்ந்த டிரெட்மில்லின் விலை 7 இலட்சம் ரூபா என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆனால், இந்தச் செய்தி வெளியாகி சில நிமிடங்களுக்கெல்லாம் மற்றொரு திடுக்கிடும் செய்தி, 9.75 இலட்சம் ரூபா கொடுத்தது 'டிரெட்மில்' இயந்திரத்தை வாங்குவதற்காக அல்ல மாறாக 45 நாட்கள் அதனை குத்தகைக்கு எடுத்துக் கொள்ள இது எப்படி இருக்கு?

சற்றே ஆசுவாசப்படுத்திக் கொள்ளுங்கள். 'ரைம்ஸ்' செய்திகளின்படி சாதாரணமான நாற்காலி ஒன்றுக்கு 8,378 கொடுக்கப்பட்டுள்ளது. 100 லீற்றர் குளிரூட்டி ஒன்றுக்கு 42,202 ரூபா கொடுக்கப்பட்டுள்ளது. இதுவும் 45 நாள் வாடகைக்குத்தான். குளிரூட்டி இயந்திரங்களிலும் கட்டுமானப் பணிகள் என்ற பணவிழுங்கி பூதம் ஒன்றுள்ளது. இன்னும் பலப் பல உள்ளன. இதில் அனைத்திலும் என்ன ஊழல்கள் நடைபெற்றிருக்கும் என்பதை நினைத்துக் கூட பார்க்க முடிவதில்லை.



இதுபோன்ற அட்டூழியங்கள் நடைபெற்றுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த ஊழல் இத்தோடு நின்றுவிடுமென்று நம்ப இந்தியர்கள் என்ன காதில் பூவையா வைத்திருக்கிறார்கள்.




இதிலெல்லாம் தனக்கோ அல்லது கொமன்வெல்த் போட்டி அமைப்புக்கோ தொடர்பில்லை என்று இந்திய ஒலிம்பிக் சங்க தலைவர் சுரேஷ் கல்மாடி கை கழுவினால் யார் நம்புவார்கள்? அமைப்பாளர் குழு பச்சைக்கொடி காட்டாமல் தன்னிச்சையாக எதுவும் நடந்திருக்க வாய்ப்பேயில்லை.

ஆனால், அமைப்புக்குழுவின் செயலரும் கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் செய்தித் தொடர்பாளருமான லலித் பானட் (பெயரில் உள்ள 'லலித்' என்பதை நினைவில் கொள்ளவும்) இது குறித்துக் கூறுவது ஒரே சமயத்தில் கோபத்தையும் சிரிப்பையும் வரவழைப்பதாய் உள்ளது.

எங்களுக்கு இந்தச் சாதனங்களை வழங்கும் நிறுவனங்களில் ஒன்று இந்தியாவிற்கு வழங்கப்படும் இந்தச் சாதனங்களின் விலை 2012 லண்டன் ஒலிம்பிக் போட்டிகளுக்கு வழங்கப்படும் விலைகளை விட குறைவானதுதான் என்று உறுதியளித்துள்ளது' என்று கூறியுள்ளார்.

அப்படியென்றால் லண்டன் ஒலிம்பிக் போட்டிகளின் நிலையை நினைத்துப் பார்க்கவும்.

இவ்வாறு இவ்வளவு பெரிய தொகை செலவு செய்து இந்தியாவின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக நடத்தப்படுகிறது என்று உரிமை கோரப்படும் இந்த கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் எதற்கும் உதவாதது.

இதில் வீரர்கள் செய்யும் சாதனைகளை கழுதை கூட மதிக்காது. எந்த சர்வதேச தொடர்களுக்கும் இதனைக் கொண்டு தகுதிபெற முடியாது. கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் ஊழல் செய்வதற்கென்றே இந்தியாவால் நடத்தப்படுகிறது.

இதில் இவ்வளவு ஊழல் என்றால், இந்தியா ஒலிம்பிக் போட்டிகளை நடத்தினால் அவ்வளவுதான்! நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தில் ஒரு அமெரிக்கருக்கு மேல் வறிய நிலைக்குள்ளாகும் ஆபத்து




2009 ஆம் ஆண்டு ஐந்து அமெரிக்கர்களில் ஒருவருக்கும் மேல் வீட்டு வருமானத்தில் முந்தைய ஆண்டை விட 25 சதவிகிதம் அல்லது அதற்கும் அதிகமான இழப்பைக் கண்டனர் என்று 'பொருளாதார பாதுகாப்பு ஆபத்தில்' என்ற தலைப்பில் ராக்பெல்லர் அறக்கட்டளை ஏற்பாடு செய்திருந்த ஒரு புதிய அறிக்கை தெரிவிக்கிறது. 1960 களில் இருந்து பொருளாதாரப் பாதுகாப்பின்மை எவ்வாறு தொடர்ச்சியாக அதிகரித்துள்ளது என்பதையும் இந்த அறிக்கை ஆவணமிட்டு 1985 இலிருந்து 2009 இற்குள் 25 சதவிகிதம் அல்லது அதற்கும் மேலான ஆண்டு வருமான இழப்பு 49.9 சதவிகிதம் என்று ஆகியுள்ளது என்றும் முடிவுரை கூறியுள்ளது.

'மக்கள் தொகை அடிப்படையில் இந்தப் போக்கைக் கவனித்தால் கிட்டத்தட்ட 46 மில்லியன் அமெரிக்கர்கள் 2007 இல் பாதுகாப்பு அற்றவர்கள் என்று 1985 ஆம் ஆண்டு 28 மில்லியனில் இருந்து உயர்ந்து கணக்கிடப்பட்டுள்ளனர்' என்று அறிக்கை கூறுகிறது. அறிக்கையை தயாரித்த ஆராய்ச்சிக்குழுவின் தலைவர் யேல் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஜாக்கப் ஹாக்கர் ஒரு பேட்டியாளரிடம் 'அடிப்படையில் நாம் பார்ப்பது தான் இப்பொழுது நம்மால் 'புதிய வழமை' என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பொருளாதாரப் பாதுகாப்பற்ற தன்மையை மெதுவாக அதிகரித்து வருகிறோம் என்றார்.



பொருளாதாரப் பாதுகாப்புக் குறியீடு (Economic Security Index -ESI) என்பதை இக்குழு தயாரித்துள்ளது. இதில் ஒரு கொடுக்கப்பட்டுள்ள ஆண்டில் தங்களுக்குக் கிடைக்கும் வருமானத்தில் குறைந்த பட்சம் 25 சதவிகித சரிவைக் கொள்ளும் அமெரிக்கர்கள் பற்றிய கணக்கீடு அளவிடப்பட்டுள்ளது. இழந்த வருமானத்தை ஈடுகட்டுவதற்குப் போதிய நிதியப் பாதுகாப்பு இவர்களிடம் இல்லை. இத்தகைய திடீரென்ற சரிவு பொதுவாக வேலையின்மை உயர்ந்த மருத்துவச் செலவுகள், அல்லது இரண்டும் சேர்ந்த நிலையில் மக்களை வறிய நிலையை எதிர் கொள்ளத் தள்ளிவிடும்.

இந்த அறிக்கை 2010 புள்ளி விபரங்களை எடுத்துக் கொள்ளவில்லை; இவ்வாண்டில் நீண்டகால வேலையின்மை பெருமளவு ஏற்பட்டுவிட்டது. இந்த ஆண்டிற்கான உகுஐ 2009 விடக் கணிசமாக உயர்ந்துவிடும்.

அதிரவைக்கும் விதத்தில் அமெரிக்கர்களில் 60 சதவிகிதத்தினர் 1966–2008 காலத்தில் 25 அல்லது அதற்கு மேற்பட்ட வருமான இழப்பைக் கொண்டனர் என்றும், இந்த இழப்புக்களின் அளவு 1980 களின் நடுப்பகுதியில் இருந்து பெரும்பாலும் அனைத்து வருமானப் பிரிவுகளிலும் பொதுவாகக் காணப்பட்டது என்றும் ஆய்வு கூறுகிறது.

மிக அதிக வருமானம், கல்வித் தேர்ச்சி உடையவர்கள் குறைந்த பாதுகாப்பின்மையைத்தான் எதிர்கொண்டனர். அதிக வசதியற்றவர்கள், குறைந்த கல்வியறிவு உடையவர்கள், ஆபிரிக்க–அமெரிக்கர்கள் மற்றும் ஹிஸ்பானியர்கள் அதிக பாதுகாப்பின்மையை எதிர் கொண்டனர். ஆனால் கிட்டத்தட்ட அனைத்துக் குழுக்களுமே கடந்த 25 ஆண்டுகளில் பாதுகாப்பின்மை மிகவும் அதிகரித்துள்ளதைத்தான் கண்டனர் என்று அறிக்கை கூறியுள்ளது.

சராசரி வருமானச் சரிவின் அளவு 1985க்கும் 1995க்கும் இடையே 38.2 சதவிகிதமும், 1997–2007க்கு இடையே 41.4 சதவிகிதமும் அதிகரித்து விட்டது என்றும் ஆய்வு கண்டுள்ளது. வருமான பாதுகாப்பின்மையின் அளவு ஒப்புமையில் வேலையின்மையின் அளவிற்கு எந்தக் கட்டத்திலும் இல்லாதவாறு கடந்த கால் நூற்றாண்டில் உயர்ந்துதான் விட்டது. 1985இல் வேலையின்மை விகிதம் 7.2 சதவிகிதம், ESI இனது 12 சதவிகிதம் என்று இருந்தது. 2002ல் வேலையின்மை விகிதம் 5.8 சதவிகிதம் என்று இருந்தபோது ESI இனது 17 சதவிகிதம் ஆயிற்று.

மருத்துவச் செலவுகள், வீட்டுக் கடன் ஆகிய இரண்டின் வெடிப்புத் தன்மை மிகுந்த அதிகரிப்புத்தான் பொருளாதாரப் பாதுகாப்பின்மை நீடித்து உயர்ந்ததுடன் தொடர்பு கொண்டது என்றும், பல தசாப்தங்கள் பொருளாதார ஏணியின் உயர்ந்த மட்டத்தில் செல்வக் குவிப்பு இருப்பதுடனும் அறிக்கையினால் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. காங்கிரஸின் வரவு–செலவுத் திட்ட அலுவலகம் 1979க்குள் 2006க்கும் இடையே சராசரி வரிக்குப் பிந்தைய வருமானம் அமெரிக்க இல்லங்களின் மத்திய ஐந்தில் ஒரு பகுதிக்கு உயர்ந்தது என்றும் ஆனால் இது பெரும் செல்வக் கொழிப்பு உடையவர்களுக்கு 112 சதவிகிதம் உயர்ந்தது என்றும் மிக உயர்ந்த 1 சதவிகிதத்தினருக்கு 256 உயர்ந்தது என்று கூறியதாகவும் தெரிவித்துள்ளது.

ராக்பெல்லர் அறக்கட்டளை ஆய்வினால் ஆவணப்படுத்தப்பட்டுள்ள பொருளாதாரப் பாதுகாப்பின்மையில் தீவிர உயர்வு, அமெரிக்க ஆளும் வர்க்கம் வேலைகள், ஊதியங்கள் மற்றும் தொழிலாள வர்க்கத்தின் வாழ்க்கைத் தரங்களை மூன்று தசாப்த காலமாக தாக்கிவருவதன் விளைவாகும். இத்தாக்குதல் செப்டெம்பர் 2008 நிதிய நெருக்கடி வெடித்தத்தில் இருந்து இன்னும் தீவிரமாகியுள்ளது. அந்நெருக்கடி 1930 களுக்குப் பின்னர் மிக மோசமான மந்த நிலையைக் கொண்டு வந்தது. ஓபாமாவின் கீழ் இந்த நெருக்கடியை தொழிலாள வர்க்கத்தின் மீது சுமத்தும் உந்துதல் ஊதிய வெட்டுகள், அதிக ஊதியம் கொடுக்காமல் உற்பத்தித்திறனை மட்டும் அதிகமாக்குதல், மிருகத்தனமான முறையில் சமூக நலச் செலவுகள் குறைப்பு மாநில உள்ளூராட்சி அரசாங்கங்களில் ஏற்படுத்தப்பட்டது ஆகியவை முடுக்கிவிடப்பட்டுள்ளது.

ஓபாமா நிர்வாகம் புஷ்ஷினால் தொடக்கப்பட்ட வோல் ஸ்ட்ரீட் பிணை எடுப்பை விரிவாக்கியது. இது வெகுஜன மக்கள்வேலையின்மையை பயன்படுத்தி நிரந்தரமாக அமெரிக்க தொழிலாளர்களுடைய ஊதியங்கள் நிலைமைகள் ஆகியவற்றைஆசியாவில் உள்ள வறிய தொழிலாளர்கள் தரத்திற்குக் குறைக்கலாம் என்ற ஆளும் வர்க்க விருப்பத்திற்கு ஆதரவு அடையாளம் காட்டியது. அவ்வாறுதான் ஜெனரல் மோட்டார்ஸும் கிறைஸ்லரும் கடந்த ஆண்டு திவால் தன்மைக்கு ஓபாமாவின் கார்பணிப்பிரிவு (Auto Task Force) செயல்பட்டதைக் குறிக்க முடியும். இதையொட்டி புதிய ஆலைகள் மூடல், பணிநீக்கங்கள், புதிதாகச் சேர்க்கப்படும் கார்த் தொழிலாளர்களுக்கு முந்தையதரத்தில் பாதி என்ற முறையில் ஊதியக் குறைப்புகள் ஆகியவை சுமத்தப்பட முடிந்தது.

இதையடுத்து சுகாதாரப் பாதுகாப்புச் 'சீர்திருத்தம்' என்று அழைக்கப்பட்டு வந்தது. இது வணிகங்களுக்கும் அரசாங்கத்திற்கும் சுகாதாரப் பாதுகாப்பு செலவுகளை பாதுகாப்பைப் பகிர்ந்து கொடுத்தல், பல மில்லியன் தொழிலாளர்கள் ஓய்வு பெற்றவர்களுடைய நலன்களைக் குறைத்தல் ஆகியவற்றின் மூலம் குறைத்துவிடும். சுகாதாரப் பாதுகாப்பு மறுசீரமைப்பிற்கு பின்னர் நிர்வாகம் பொருளாதார ஊக்க நடவடிக்கைகளையும் கைவிட்டு விட்டது. இதற்குக்காரணம் வரவு –செலவுத் திட்டப் பற்றாக்குறையை குறைப்பதற்கு மில்லியன் கணக்கான உழைக்கும் மக்கள் நம்பியுள்ள அடிப்படைச் சமூக நலத் திட்டங்களைத் தாக்குவதில் குவிப்புக் காட்டுவதற்குத்தான்.

இக்கொள்கைகளின் விளைவு பெருநிறுவன இலாபங்களில் மிக அதிக உயர்வாகும். இது தொழிலாளர் பிரிவுச் செயலவினங்களைப் பணிநீக்கங்கள், ஊதிய, நலன்கள் வெட்டுகள் மற்றும் ஊதியத்தை உயர்த்தாமல் தொழிலாளர் உற்பத்தித் திறனை மட்டும் கூடுதலாகக் கொடுக்க வேண்டும். ஆகியவற்றை செயல்படுத்துவதை அடித்தளமாகக் கொண்டுள்ளது.

'ஆழ்ந்த வெட்டுகளில் தொழில் நிறுவனங்கள் ஏற்றமிகு இலாபங்களைக் காண்கின்றன' என்ற தலைப்பில் ஜூலை 26 ஆம் திகதி நியூயோர்க் டைம்ஸ் அமெரிக்கப் பெருநிறுவன இலாபங்கள் 2008 கடைசியில்இருந்து 2010 முதல் காலாண்டிற்குள் 40 சதவிகிதம் உயர்ந்தன என்று கூறியுள்ளது. அடுத்த ஆண்டிற்குள் இலாப விகிதம் மிக அதிகளவிலான 8.9 சதவிகிதத்தை அடையும் என்று பகுப்பாய்வாளர்கள் எதிர்பார்க்கின்றனர் என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

இரண்டாம் காலாண்டின் முடிவுகளை வெளியிட்டுள்ள குக 500 நிறுவனங்கள் மொத்தம் 175இல் பத்தில் ஒன்றிற்கு மேல் குறைந்த விற்பனையில் அதிக இலாபம் அடைந்ததாகவும், இது தற்போதைய மந்தநிலைக்கு முந்தைய சராசரி காலாண்டில் இருந்ததைவிட கிட்டத்தட்ட இரு மடங்கு அதிகமாகும் என்று டைம்ஸ் கூறியுள்ளது. இரண்டாம் காலாண்டின் வருமானங்களை வெளியிட்டுள்ள நிறுவனங்களின் வருமானங்கள் சராசரியாக 6.9 சதவிகிதம் உயர்ந்தன, இலாபங்கள் 42.35 சதவிகிதம் உயர்ந்தன என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கட்டுரை மோட்டார் சைக்கிள் உற்பத்தி நிறுவனம் Harley Davidson கடந்த மாதம் விற்பனை எண்ணிக்கை குறைந்போதிலும்கூட, 71 மில்லியன் இலாபம் கிடைத்துள்ளதை வெளியிட்டுள்ளது. இது ஓராண்டிற்குமுன் இருந்த இலாபத்தைப் போல் மூன்று மடங்கு அதிகம் ஆகும். கடந்த ஆண்டு நிறுவனம் 2,000 வேலைகளை தகர்த்தது, மற்றும் 1,400 முதல் 1,600 வேலைகளை அடுத்த ஆண்டு இறுதிக்குள் குறைக்க உள்ளது. Harley பங்கு அதன் காலாண்டு முடிவுகளை வெளியிட்ட தினத்தில் 13 சதவிகிதம் உயர்ந்தது.

சரியும் விற்பனைகள் மற்றும் வருமானங்களை இழந்தும் தங்கள் அடித்தளத்தை முன்னேற்றியுள்ள நிறுவனங்களில் General Electric, JPMorgan Chase, Hasbro, Ford ஆகியவை உள்ளன. Ford இன் வடஅமெரிக்கச் செயற்பாடுகளில் 2010 இல் 2005 இல் இருந்து வருமானச் சரிவு இருந்தபோதிலும் 2010 இல் 5 பில்லியன் டொலருக்கும் மேல் ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2005–2010 காலத்தில் நிறுவனம் அதன் வட அமெரிக்க தொழிலாளர் தொகுப்பை கிட்டத்தட்ட 50 சதவிகிதம் குறைத்தது.

டைம்ஸ் கட்டுரை வந்த அன்றே வோல்ஸ்ட்ரீட் ஜேர்னல் ஒரு கட்டுரையை வெளியிட்டது; அதில் நிதியச் சந்தைகள் பொதுவாக விரிவாக்க திட்டங்களைக் கொண்டுள்ள நிறுவனங்களைத் தண்டிக்கின்றன, புது தொழிலாளர்களை சேர்க்காதவை, இன்னும் பணிநீக்கம் செய்யும் நிறுவனங்களுக்கு வெகுமதி அளிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வர்க்கப் போர்க் கொள்கை நிதியப் பிரபுத்துவத்தை இன்னும் செல்வக் கொழிப்பு உடையதாகச் செய்துள்ளது. செவ்வாயன்று வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் கடந்த தசாப்தத்தில் மிக அதிக ஊதியம் பெற்ற பெருநிறுவன தலைமை நிர்வாக அதிகாரிகளின் பட்டியலை வெளியிட்டது. இப்பட்டியலின் உயர்மட்டத்தில் Oracle இன் தலைமை நிர்வாக அதிகாரி லாரன்ஸ் எல்லிசன் உள்ளார். கடந்த 10 ஆண்டுகளில் இவர் ஈட்டிய ஊதியம் 1.84 பில்லியன் ஆகும்.

அவருடைய சராசரி ஆண்டு வருமானம் 184 மில்லியன் என்பது எல்லிசனை அவருடைய மொத்தச் சொத்து மதிப்பை ÷ 28 பில்லியன் ஆக்க உதவியது. எல்லிசன் மற்றும் அவருடைய சக தலைமை நிர்வாகிகள் வாழும் முறை Oracle இன் உயர் நிர்வாக அதிகாரிகள் பல போர் விமானங்களை வைத்துள்ளார். கலிபோர்னியாவில் 200 மில்லியன் மதிப்புடைய பண்ணையை வைத்துள்ளார், அதில் செயற்கையாக மனிதனால் உருவாக்கப்பட்ட ஏரி உள்ளது. இதைத்தவிர அவருக்கு மாலிபு, ரோட தீவு ஆகியவற்றிலும் பெரும் அரண்மனை போன்ற வீடுகள் உள்ளன.

பறி கிரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ராணி முகர்ஜி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை தினக்குரல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15, எலி ஹவுஸ் ரோட், 68ஆம் இலக்கத்தில் 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.